விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : பன்னிரண்டு + 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 14 ஞாயிற்றுக்கிழமை (31.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 316

## வடக்கில் தொடர்ந்து கன மழைக்கு வாய்ப்பு



(யாழ்ப்பாணம்)
வங்களா விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து கன மழை ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
இலங்கையின் கிழக்கே வங்காள விரிகுடா கடற் பகுதியில் தாழமுக்கம் 11

## விபரீத முடிவெடுத்த மாணவி உயிரிழப்பு
### முல்லையில் சம்பவம்



(முல்லைத்தீவு)
விபரீத முடிவெடுத்த 16 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் நேற்று முல்லைத்தீவில் 11

தொடர் மழை
## யாழில் பல இடங்கள்
### வெள்ளக்காடாகின

(யாழ்ப்பாணம்)
யாழில் கடந்த மூன்று நாட்களாக பெய்த கனமழை காரண 11

நாட்டில் மேலும்
## 19 பேர் பலி

(கொழும்பு)
கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.
இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் 11

# பாரதூரமான மோசடிகளில் எமது அரசு ஈடுபட்டுள்ளது

## பெரும் மனவேதனையுடன் அமைச்சர் உதய கம்மன்பில



*(கொழும்பு)* ஊழல் மோசடிக்கு பெயர்போன ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸ, சந்திரிகா மற்றும் ரணில் ஆகியோரது ஆட்சிக்காலத்தை காட்டிலும் பாரதூரமான மோசடிகளில் எமது அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்பதை பெரும் மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அமைச்சு பதவிகளை வகித்துக் கொண்டு அரசாங்கத்தின் தவறான தீர்மானங்கள் அனைத்திற்கும் தலையாட்டிக் கொண்டிருந்தால் எதிர்கால தலைமுறையினர் எம்மை விமர் 11

## பணவீக்கம் அதிகரிக்கும்
### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)
பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளதன் அடிப்படையில் அடுத்த சில மாதங்களில் பணவீக்கம் 11

## யாழ்.பல்கலையில் 6 விரிவுரையாளர்கள் பேராசிரியர்களாக பதவி உயர்வு



(11ஆம் பக்கம் பார்க்க)

## தரம் 10, 11, 12, 13 வகுப்புக்கள் நவம்பர் 8 முதல் ஆரம்பம்
### 6 தொடக்கம் 9 வரையான வகுப்புக்களை ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)
நாட்டின் அனைத்து அரசாங்க பாடசாலைகளிலும் தரம் 10 முதல் 13 வரையான வகுப்புக்கள் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.
கோவிட்-19 ஒழிப்பு செயலணியின் பரிந்துரைக்கு அமைய கல்வி அமைச்சு இந்த தீர்மானத்தை மேற் 11

## கொட்டும் மழையில் உறவுகள் போராட்டம்



(06ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி செயலணியில் ஞானசார தேரர் தொடர்ந்தால்
## நீதியமைச்சராக என்னால் தொடர்ந்து சேவையாற்ற முடியாது - அலி சப்ரி

(கொழும்பு)
"ஒரு நாடு - ஒரு சட்டம்" என்ற எண்ணக்கருவை முன்னெடுத்து செல்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிக் குழுவின் தலைவராக கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமை குறித்து நீதியமைச்சர் அலி சப்ரி தனது எதிர்ப்பை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார்.
இந்த நியமன 11

## மேலும் முக்கிய பல சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகின
### விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)
துறைமுகங்கள், எரிபொருள், தபால்கள், புகையிரத மற்றும் போக்குவரத்து சபை சேவைகள், சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து மற்றும் இலங்கை மத்திய வங்கி உட்பட பல அரச வங்கிகளை அத்தியாவசிய சேவைகளாக மாற்றும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.
ஜனாதிபதி கோட்டா 11

கொடிகாமத்தில்
## 9 பவுண் நகை, பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேம்பிராய் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9 11

போதைப்பொருள், வாள்களுடன்
## வல்வெட்டித்துறையில் 13 பேர் நேற்று கைது

(கரணவாய்)
யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் போதைப்பொருட்கள் மற்றும் வாள் உட்பட கூரிய ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 13 பேர் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு 11

# மரண அறிவித்தல்



## திருமதி ஜெயதேவி திலகராஜா

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் 3ஆம் கட்டை, பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயதேவி திலகராஜா நேற்று (30.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திலகராஜாவின் (ஓய்வுபெற்ற மதுவரி உதவி ஆணையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் ஸ்ரீதேவி, குருநாதன், சபேசன், காலஞ்சென்ற புவனசுந்தரன் மற்றும் சிவதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்ஷினியின் அன்புத் தாயாரும் மகேந்திரனின் (முன்னாள் மாவட்ட திட்ட முகாமையாளர் – Save the Children in Sri Lanka) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (8449)

3 ஆம் கட்டை, பலாலி வீதி, திருநெல்வேலி.
077 344 2566
தகவல் :- தர்ஷினி மகேந்திரன் (மகள்)

# காணி விற்பனைக்கு




(8447)

**இல. 228, யாழ். ஸ்ரான்லி வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

இவ் ஆதனம் வெளிப்படுத்தல் ஆட்சி உறுதி

**விலை பேசித் தீர்மானிக்கப்படும்.**

**077 892 8094, 076 699 5249**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# பிரத்தியேக வகுப்பு

**Group Class**

அனுபவம்வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

- தரம் 9 - 11 வரை வரலாறு
- A/L வரலாறு
- இந்து சமயம்
- ICT

(8432)

தொடர்புகளுக்கு - **076 645 9287**

# மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (8264)

☎-070 640 5951

e-mail : engchelvam@gmail.com

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1977, உத்திரட்டாதி. மீனம், கி.பா 17 1/4, சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. நேரடித் தொடர்புகளிற்கு (8446)

**076 449 6275**

# பிறந்தநாள் நினைவலைகள்



மட்டுவில் மண்ணில் தோன்றி
மாசறு ஆசான் என்றே
கட்டிலா மாணவர்க்காய்
கருணையோ டன்பைச் சேர்த்தே
உற்ற பேரன் பொளியில்
உலகினைக் காண வைத்தாய்
சுற்றமும் வாழச் சுந்தரக்கையால்
சுகநலம் ஓங்கவும் வைத்து
பெற்ற பேற்றினை கண்முன்நிறுத்தி
பெருமையால் உலகினை ஆண்டாய்
கற்றனை கலங்கரை விளக்காய்
காப்பது குடும்பத்தின் மேன்மை
வற்றிடா அன்பினில் வார்த்தநின்
மனைவியும் வளர் மைந்தர் மூவர்
பெற்றிடும் பேற்றிற்கா யேங்கியமூச்சு
நால்பத்து ஏழினில் நின்றிட்டபோதும்
முற்றுமே தளர்ந்து மூச்சித்துநின்று
முழுமையும் நினைவினில் வாழ
பற்றுடன் ஒளியாய்ப் பார்வையில் கண்டு
பணிகளில் ஒன்றியே ஊக்கி
வற்றிடா உறவில் வாழ்ந்திடு தெய்வமே
வாழ்க எம்முள் கலந்து.

## அமரர் வேலுப்பிள்ளை அன்பழகன்

பிறப்பு : 31.10.1974
இறப்பு : 02.04.2021

இல. 42/6, சிவகுருநாதர் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (8443)

என்றும் ஆறாத்துயரில்
குடும்பத்தினர்

# 50 இலட்சத்தை தாண்டியது கொரோனா உயிரிழப்பு

**(கொழும்பு)**

**உலகம் முழுவதும் கொடிய கொரோனா வைரஸ் தொற்று நோய்க்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்தைக் கடந்துள்ளது.**

நேற்று சனிக்கிழமை காலை வரையான உத்தியோகபூர்வ தரவுகளின்படி உலகம் முழுவதும் கொரோனாவுக்கு பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை 50 இலட்சத்து 4 ஆயிரத்து 370 ஆக பதிவாகியுள்ளது.

அத்துடன், இதுவரையான உத்தியோகபூர்வ தரவுகளின்படி கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 24 கோடியே 67 இலட்சத்து 50 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 22 கோடியே 35 இலட்சத்து 29 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

உலகம் முழுவதும் கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி முயற்சிகள் வேகமெடுத்துள்ளபோதும் கொரோனாத் தொற்று மற்றும் மரணங்களில் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. (ஙி)

## தனியார் வகுப்புகளை நடத்த நிபந்தனைகளுடன் அனுமதி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் 50 சதவீத மாணவர் கொள்ளளவுடன் பிரத்தியேக வகுப்புக்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த ஏப்ரல் மாத இறுதியில் பிரத்தியேக வகுப்புக்களுக்கு தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஙி-5)



கோட்டாபய ராஜபக்ஷ ஸ்கொட்லாந்திற்கு வருகை தருவதைக் கண்டித்தும் தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக சுயாதீன விசாரணை வேண்டும் என்பதனை வலியுறுத்தியும் ஐரோப்பிய ஆலோசனை அவை முன்றலில் ஐரோப்பிய தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

**விற்பனைக்கு/ வாடகைக்கு**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் காணிகள், வீடுகள், கடைகள் விற்பனைக்கு/ வாடகைக்கு உண்டு.

077 522 1132
076 534 6562
076 281 2188

(8439)

**IELTS CLASSES**

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

OXFORD ENGLISH ACADEMY,
Ariyakulam junction, Jaffna.

(8439)

TP : 077 780 3970, 074 007 1970

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர். லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)

(2018 ஆம் ஆண்டு உயர்தர மாணவன், தொழில்நுட்பப்பிரிவு, யா/ வயாவிளான் மத்திய கல்லூரி)

இருள் சூழ்ந்த என் வாழ்வில் ஒளி வீசுமோ
இருள்கொண்ட மேகங்கள் கலைந்து ஓடுமோ?
அப்பாவின் வாழ்வில் விடிவெள்ளி இனி பூக்குமோ?
அப்பாவின் கண்ணீருக்கு எப்பதான் விடிவுகாலம்?

தாயின் மடியில்
1999 – 05 – 18



ஆண்டவன் மடியில்
2020 – 11 – 11

முல்லையும் மருதமும் பாலையும் நெய்தலும் கொண்ட ஒரு பிரதேசத்தில் ஓர் சிறிய கிராமம் புன்னாலைக் கட்டுவன். 11.11.2020 ஆம் திகதி. அது ஒரு புதன்கிழமை. அன்று வழமை போல் சேவலும் குயிலும் கூவ, பட்சிகள் கூட்டம் ஓசை எழுப்ப, காகமும் கரைய, அணில்களும் தத்தித் தாவ, பதற்றமும் இல்லாமல் காலையும் விடிந்தது. ஆனால் அன்று நேரம் 1.00 மணியளவில் தம்பி அந்தக் கொடிய நோய் உன் உயிரைப் பறித்தது. ஆனால் இன்றுவரை எம் ஆன்மாவை உலுப்பிக் கொண்டே இருக்கின்றது. பெற்றவர்கள் கண்கலங்கி, தடுமாறி அந்தக் காயத்தைப் போக்க முடியாமல் வலியோடு வாழ்கின்றார்கள். நாங்கள் இந்தப் பூமியில் இழந்த மிகப்பெரிய சொத்து தம்பி கபிலன்தான். நீ நட்ட மாமரமும் பூக்கவில்லையே. தம்பி வரட்டும் என்று சொல்லி காத்திருக்கின்றது. தம்பி கபிலன் எங்கே? ஒரு கணம் உங்கள் விழிகளை திறந்து உங்கள் திருமுகம் காட்டி சிரித்துப் பேசவா. தம்பி கபிலன் என்கின்ற அழகான ஆண்மகனை பரிசாகத் தந்த கடவுள் நீண்ட ஆயுளைக் கொடுக்க மறந்தது ஏனோ, நாங்கள் இந்தப் பூமியில் துடிதுடிக்க அந்த ஆண்டவன் என் பிள்ளையை பறித்துச் சென்றானே. காலையில் பறவைகள் கூட்டம் இரைதேடச் சென்றாலும் மாலையில் கூடு திரும்புதே. ஆனால் என் தம்பி கபிலனோ ஒரு வருடம் ஆகியும் எங்கள் வீடுவந்து சேரலையே. கபிலன் உன் வருகைக்காக காத்திருக்கின்றோம். ஐந்து கரம் நீட்டி நிற்கின்றோம். இறைவா என் பிள்ளையைத் திருப்பித் தந்திடு. மற்றவர் போல் எங்களையும் வாழவிடு. தம்பி கபிலனின் திருமுகத்தில் வெறும் வேதனைத் துளிகளைத் தான் அப்பா பார்த்தேன். தம்பி கபிலன் உன்னை இழந்ததால் எங்கள் வீடு பாலைவனம் ஆனதே. எங்கள் செடியில் பூத்த முதல் பூவே தம்பி கபிலன் நீ பூத்த செடி பூ இன்றி தவிக்கின்றது. தம்பி கபிலன் விதிகளை மீறி ஒருமுறை தான் வாழ்ந்து பார்ப்போம். என்றும் உன் நினைவுகளோடு நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

(8437)

**உன் பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்**

# பாபர் அசாம் அரைச்சதம் பாகிஸ்தானிடம் ஆப்கான் சரண்

இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் 24 ஆவது லீக் போட்டியில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் குழு 2 இல் நடைபெற்ற இப்போட்டியில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியும் ஆப்கானிஸ்தான் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 147 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, நபி மற்றும் குல்பதீன் ஆகியோர் ஆட்டமிழக்காது தலா 35 ஓட்டங்களையும் நஜிபுல்லா 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், இமாட் வசிம் 2 விக்கெட்டுகளையும் ஷயின் ஷா அப்ரிடி, ஹரிஸ் ரவூப், ஹசன் அலி மற்றும் சதாப் கான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.




இதனைத் தொடர்ந்து 148 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, 19 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பாபர் அசாம் 51 ஓட்டங்களையும் பகர் சமான் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ரஷித் கான் 2 விக்கெட்டுகளையும் முஜிபர் ரஹ்மான், மொஹமட் நபி மற்றும் நவீன் உல் ஹக் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 7 பந்துகளில் 4 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்ட ஆசிப் அலி தெரிவுசெய்யப்பட்டார். (4-6)

# அஸ்வினின் அனுபவம் இந்தியாவிற்கு முக்கியம்




பிரட் லீ



இருபது- 20 உலகக்கிண்ணத்தில் நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இந்தியா அஸ்வினை களமிறக்க வேண்டும் என்று பிரட் லீ தெரிவித்துள்ளார்.

இருபது-20 உலகக் கிண்ண போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமனில் நடைபெற்று வருகிறது.

இதில் இந்திய அணி தான் ஆடிய முதல் போட்டியில் தோல்வியை தழுவிய நிலையில், இன்று நியூசிலாந்து அணியுடன் மோதவுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த பிரட் லீ, இந்திய அணிக்கு ரவிச்சந்திரன் அஸ்வினின் அனுபவம் தேவை என்று கூறியுள்ளார். அஸ்வின் பல இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அவருடைய அனுபவம் இந்திய அணிக்கு உதவியாக இருக்கும் என்று கூறிய அவர், நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இந்தியா அஸ்வினை களமிறக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் அஸ்வின் 11 பேர் கொண்ட அணியில் இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது. (4-6)

# மலிங்கவின் சாதனையை முறியடித்தார் ரஷீத்




இருபதுக்கு - 20 உலகக் கிண்ண போட்டியில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணிகள் நேற்று முன்தினம் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 147 ஓட்டங்களைச் சேர்த்தது. அடுத்து ஆடிய பாகிஸ்தான் 5 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் அணியின் முகமது ஹபீஸ் விக்கெட்டை ரஷீத்கான் எடுத்தார். இது அவரது 100 ஆவது விக்கெட் ஆகும்.

மேலும், 53 இருபது- 20 போட்டிகளில் விளையாடியுள்ள ரஷீத்கான் அதிவேகமாக 100 விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற புதிய சாதனையை படைத்துள்ளார்.

முன்னதாக, இலங்கையின் லசித் மலிங்க 76 போட்டிகளில் 100 விக்கெட் கைப்பற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

# பரபரப்பான போட்டியில் பங்களாதேஷை வீழ்த்தியது மேற்கிந்திய தீவுகள் அணி

இருபது-20 உலகக் கிண்ண தொடரின் 23ஆவது லீக் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

சார்ஜாவில் நேற்று முன்தினம் குழு 1 இல் நடைபெற்ற இப்போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணியும் பங்களாதேஷ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 142 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.




இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, நிக்கோலஸ் பூரான் 40 ஓட்டங்களையும் ரோஸ்டன் சேஸ் 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், மெயிடி ஹசன், முஸ்டபிசுர் ரஹ்மான் மற்றும் சொரிபுல் இஸ்லாம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 143 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 139 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லிடொன் தாஸ் 44 ஓட்டங்களையும் மொஹமதுல்லா ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், ராம்போல், ஜேசன் ஹோல்டர், ஆந்ரே ரஸ்ஸல், அகீல் ஹொசைன் மற்றும் டுவைன் பிராவோ ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 22 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 1 பவுண்ரி அடங்கலாக 40 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிக்கோலஸ் பூரான் தெரிவுசெய்யப்பட்டார். (4-6)

# இராசிபலன்

31.10.2021
ஜப்பசி 14, ஞாயிற்றுக்கிழமை
தசமி முற்பகல் 10.39 மணிவரை
மகம் முற்பகல் 10.18 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சந்திராஷ்டமம்: அவிட்டம்

வளவன்

**மேஷம்** — சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள வாய்ப்புகள் வந்து சேரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், தொட்ட காரியங்கவில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்** — தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** — பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**கடகம்** — வருமானம் திருப்தி தரும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** — குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி** — அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும், குடும்பத்தினை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**துலாம்** — இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** — உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** — வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** — உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கும்பம்** — புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மீனம்** — உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய் தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

நீ உன்னை சந்திக்கும் நேரம் தான் தியானம்

# எல்லா வகை குருதிகளுக்கும் தட்டுப்பாடு

## உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுங்கள்

### யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா மருத்துவமனையில் இரத்த வங்கி யில் எல்லா வகை குருதிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கி அறிவித்துள்ளது.**

எனவே குருதிக் கொடையாளர்கள் 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொண்டு இரத்ததானம் செய்ய முன்வருமாறு இரத்த வங்கி கோரியுள்ளது.

ஏற்கனவே இரத்ததானம் வழங்கி நான்கு மாதங்கள் பூர்த்தியானவர் மற்றும் புதிதாக இரத்ததானம் செய்யக் கூடியவர்கள் உங்களுக்கு அருகிலுள்ள இரத்த வங்கிக்குச் சென்று இரத்ததானம் செய்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுங்கள்.

கொவிட் - 19 தடுப்பூசி போட்டிருந்தால், போட்ட தினத்திலிருந்து ஒரு கிழமையின் பின்பு இரத்த தானம் செய்யலாம்.

கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தால் குணமடைந்து தொற்று இல்லையென உறுதிப்படுத்திய



தினத்திலிருந்து ஒரு மாதத்தின் பின்பு இரத்ததானம் செய்யலாம் என இரத்த வங்கியினர் அறிவித்துள்ளனர். (நி-5-33)

# படுகொலை செய்தே ஆட்சியை கைப்பற்றிய அரசாங்கங்கள்

## மனித உரிமை ஆர்வலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆட்சியைப் பெறுவதற்கும் அதைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் மக்களைக் கொன்று காணாமலாக்குவது போன்ற பல நடவடிக்கைகள் நாட்டை ஆட்சி செய்த ஒவ்வொரு அரசியல் கட்சிகளாலும் மேற்கொள்ளப்பட்டதாக, நாட்டின் சிரேஷ்ட மனித உரிமை ஆர்வலர் குற்றம் சாட்டினார்.

இலங்கையில் காணாமல் போனவர்களின் நினைவாக சீதுவ ரத்தொலுவ நினைவிடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் ஒன்றியத் தலைவரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான பிரிட்டோ பெர்னாண்டோ இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசியல் கட்சிகளும், வடக்கு, தெற்கு என்ற பேதமில்லாமல், தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமில்லாமல், இந்த மக்களின் மரணத்தையும் காணாமல் போதலையும், அதிகாரத்தை பெற்றுக்கொள்ள அல்லது பாதுகாத்துக்கொள்ள ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டன.

வடக்கிலும், தெற்கிலும் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியும் சிறு விசாரணை கூட இல்லை என வும், அவர்களுக்கான இறப்பு சான்றிதழ்களே வழங்கப்பட்டுள்ளன எனக் கூறிய துடன் அவர்கள் இறந்தது எப்படி உறுதியானது என அவர் கேள்வி எழுப்பினார். (நி-5)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1986 பூரம். 5'4". தொழில் கணக்காளர் கொழும்பு. கல்வி தகைமைகள் MBA, BSc Finance, ACCA யாவையும் UK தகைமைகள். தகுதியான மணமகனை எதிர்பார்க்கின்றோம். C-1507

தொடர்பு 078 941 7651

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணி சுப்பர் மார்க்கெட்டுகளில் எமது வீட்டு சுத்திகரிப்பு இரசாயன (House hold cleaning Chemical Items) தயாரிப்புக்களை சந்தைப்படுத்துவதற்கு Sales Promotional Girls தேவை.

உங்கள் சுயவிபரக் கோவையை (Curriculum Vitae) எமது மின்னஞ்சல் முகவரி findjobjaffna@gmail.com இற்கு 05/11/2021 முன்னர் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவும். C-1506

E mail: findjobjaffna@gmail.com
Mobile: 077 200 8484

**ஜெயக்குமார் திருமண சேவை**

1984 ஆண் சுவிஸ், 1989 கனடா, 1987, 1985 பிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவில் வசிக்கும் மணமகன்களுக்கு மணமகள்மார் தேவை. 1990 இலிருந்து 1995 வரையுள்ள சூரிய+செவ் பெண் (லண்டன்-கனடா) உள்ள மணமகள்மாருக்கு பல்கலைக்கழகத்தில் படித்த மணமகன்மார் தேவை. ஊரிலுள்ள மணமகனுக்கும் மணமகள் தேவை.

இலங்கை 077 335 2262
இலங்கை வைபர் 009 476 204 9298
ஜேர்மன் 004 917 643 399 372
(8435)

# யாழில் ஐ.நா.அலுவலக முன்றலில்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலக முன்றலில் கொட்டும் மழையிலும் நேற்றுச் சனிக்கிழமை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



யாழ்.மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தமது பிள்ளைகளை உலக நாடுகள் மீட்டுத்தர வேண்டும், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், இந்த அரசாங்கத்தில் நம்பிக்கையில்லை, சர்வதேசமே நமக்கு தீர்வைக் கொடு போன்ற கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(4-5-33-18-104)

# தொழில் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வியமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழிற்கற்கை நெறிக்காக மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

க.பொ.த (சா/ த) இல் சித்தி அல்லது சித்தியின்மையைக் கருதிக் கொள்ளாது 2019 அல்லது 2020 இல் க.பொ.த( சா/ த ) பரீட்சைக்கு தோற்றியோர் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை கல்வியமைச்சின் இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்யலாம், அல்லது பாடசாலையில் பெற்றுக் கொள்ளலாம். 2021 நவம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து யாழ். மத்திய கல்லூரியின் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.எழில்வேந்தன் அறிவித்தார். (4-5)

# உள்ளகப் பயிற்சிக்காக எட்டு வைத்தியர்கள் நியமனம்



(குப்பிழான்)

வடமாகாணத்தில் ஆதார வைத்தியசாலைகளில் முதன் முதலாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு உள்ளகப் பயிற்சி பெறுவதற்காக எட்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வைத்தியர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் தெல்லிப்பழைப் புற்றுநோய் வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி பரமநாதன் திலீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஈ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (4-5-18-33)



யாழில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக தாழ் நில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

யாழில் பருவ மழை கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வருகிறது. இந்நிலையில் மறு அறிவித்தல் வரை கரையோர மக்களை அவ தனமாக இருக்குமாறு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

(படம்- சிவசாந்தன்)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு அளவெட்டி மாசியப்பிட்டி சிவன் கோயிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சண்முகராஜ சேகரசிவாச்சரியார், பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மா ஆகியோரது அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெற வுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)

# தொழில்நுட்பவியல் கல்லூரியின் கற்கைநெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் குறுகிய கால கற்கை நெறிகளுக்கான இறுதிப் பரீட்சை 2021 செப்டெம்பருக்கானது.மற்றும் பழைய பாடத்திட்டத்திற்கான குடிசார் எந்திரவியல், பொறிமுறை பொறியியல், மின்பொறியியல், கணிய அளவையியல் பாடநெறிகளை இதுவரை பூர்த்தி செய்யாத மாணவர்களுக்காக மீண்டும் இப் பரீட்சையை நடத்துவதற்கு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இப் பரீட்சைக்கு தோற்ற விரும்புபவர்கள் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பிரிவுடன் தொடர்பு கொண்டு தமது விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 05.11.2021 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் எஸ். முகுந்தன் அறிவித்துள்ளார். (4-5)

# குமாரசாமி குருக்கள் ஞாபகார்த்த மண்டபம்



(குப்பிழான்)

அச்சுவேலியின் பெயரை உலகறியச் செய்த பெருந்தகையரில் பிரதானமானதாக விளங்கும் சிவாகமஞானபானு சிவஸ்ரீ ச.குமாரசாமிக் குருக்களுக்கு அச்சுவேலியைச் சேர்ந்த கிராம மக்களின் நிதிப் பங்களிப்புடனும் ஒத்துழைப்புடனும் "ஞாபகார்த்த கூடம்" அமைக்கப்படவுள்ளது.

இதற்கமைய குமாரசாமிக் குருக்கள் ஞாபகார்த்த கூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு குமாரசாமிக் குருக்கள் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் அச்சுவேலி குருக்கள் வளவில் நடைபெற்றது.

குமாரசாமிக் குருக்கள் அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வரக் குருக்கள் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது. (4-5-18)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 140 | 160 |
| தக்காளி | 250 | 220 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 180 | 140 | 150 | 200 |
| கரட் | 100 | 220 | 200 | 240 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 250 | 200 | 140 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 180-200 | 280 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 160-220 | 240 |
| பாகற்காய் | 350 | 500 | 340 | 300 |
| வெண்டிக்காய் | 160 | 140 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 300 | 320 | 200 | 320 |
| லீக்ஸ் | 200 | 250 | 230 | 240 |
| பீற்றூட் | 100 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 250 | 350 | 240 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 120 | 200 |
| போஞ்சி | 300 | 250 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 160 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 480 | 450 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 280 |
| வெங்காயப்பூ | -- | 300 | -- | 300 |
| முள்ளங்கி | 140 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 100 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | 120 |

# சிறுவர், இளையோர் இடையே உளநலப் பாதிப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

**நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் உளநலக் கோளாறுகளால் பாதிக்கப்படும் சிறுவர்கள் மற்றும் இளைய சமுதாயத்தினரின் எண்ணிக்கை 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.**

களனிப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், ராகம போதனா மருத்துவமனையின் குழந்தைகள் மற்றும் இளம்பருவ சுகாதார நிபுணருமான, மருத்துவர் மியுரு சந்திரதாச நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார்.

தற்போது டிஜிட்டல் திரைக்கு அடிமையாகும் மனநிலை சிறுவர்கள் மற்றும் இளைய சமுதாயத்தினர் மத்தியில் பெரும்பாலாக காணக்கூடியதாக உள்ளது. இதனால் உளநலக் கோளாறுகளால் அவர்கள் பாதிப்படைவது அதிகரித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின்

# முற்பதிவிற்காக தொ.இலக்கம், இணையத்தளம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மோட்டார் வாகனப்போக்குவரத்துத்திணைக்களத்திற்கு சேவை பெற வருபவர்களுக்கென புதிய தொலைபேசி இலக்கத்தினை அத்திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி சேவை பெறுவதற்காக திகதியையும் நேரத்தையும் 0212117116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது **https://dmtappointments.dmt.gov.lk** என்ற இணையத் தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் பதிவினை மேற்கொள்ளலாம்.

இதற்கு முன்னர் குறித்த சேவையினைப் பெறுவதற்காக முன்னைய தொலைபேசி இலக்கத்தினுடாக திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்தவர்கள் புதிதாக அறிமுகமான இம்முறையின் கீழ் பதிவுகளை மேற்கொண்டு நாளை முதல் சேவையினைப் பெற்றுக் கொள்ளுமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களப் பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை 021 222 3789, 021 222 7552, 070 659 9078 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்திப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# மனித உரிமை மீறல்கள்; ஆராய இலங்கையில் அலுவலகம்

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்த விடயங்களைக் கண்டறிய இலங்கையில் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக புதிய அலுவலகம் ஒன்றைத் திறக்கவும் பிரதிநிதிகளை பணியில் சேர்ப்பதற்கும் தேவையான நிதியை ஒதுக்குவதற்கான யோசனையை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், அலுவலகத்தை இலங்கையில் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இதற்கு எதிர்ப்பை வெளியிட்டால், அந்த அலுவலகத்தை இந்தியாவில் திறக்கவும் அங்கிருந்து குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகளை நடத்தவும் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. (நி-5)

# ஸ்கொட்லாந்து புறப்பட்டார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஐ.நா. காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

26 ஆவது காலநிலை மாற்ற மாநாடு இங்கிலாந்து அரசாங்கத்தால் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் இன்று முதல் நவம்பர் 12 வரை நடத்தப்படுகிறது. உலகத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கிளாஸ்கோவில் காலநிலை மாற்றத்தைச் சமாளிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் முயற்சியில் ஒன்று கூடவுள்ளனர். (நி)

# டெல்டாவை விட 15 மடங்கு ஆபத்தான வைரஸ்

## 42 நாடுகளில் பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தகவல்

(லண்டன்)

மீண்டும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் **AY.4.2** புதிய டெல்டா உரு திரிபு வைரஸால் பாதிக்கப்பட்ட 26 ஆயிரம் பேர் 42 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட இந்தத் திரிபு டெல்டாவை விட 15 மடங்கு வேகமாகப் பரவக் கூடியது என தெரிவிக்கப்படும் நிலையில் இது உலகெங்கும் மற்றொரு தொற்றுநோய் எழுச்சிக்கு வழிவகுக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

போலந்து, ஜேர்மனி மற்றும் நெதர்லாந்திலும் **AY.4.2** உரு திரிபு வேகமாகப் பரவ ஆரம்பித்துள்ளது.

அத்துடன், இந்தியாவிலும் 17 பேர் இந்த வகை திரிபு வைரஸால் பாதிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஆட்சியைத் தக்கவைக்கவே ஞானசார தேரருக்குப் பதவி

## சஜித் அணி குற்றச்சாட்டு



(கொழும்பு)

"இனவாதம் மற்றும் மதவாதத்தைக் கக்கி, மக்களைப் பிளவுபடுத்தி ஆட்சியைப் பிடித்த இந்த அரசு, தற்போது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அதே பாணியைக் கையாள்கிறது. இதற்காகவே ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம் சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"இனவாதம் பேசி, மதவாதத்தைக் கையில் எடுத்து, மக்களைப் பிளவுபடுத்தி, மோதல்களை ஏற்படுத்தியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. தற்போது எல்லா வழிகளிலும் தோல்வி கண்டுள்ளது.

எனவே, ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அன்று கையாண்ட யுக்திகளை கையாள முயல்கிறது.

ஞானசார தேரர் உள்ளிட்டவர்கள் இந்த அரசைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தனர். ஞானசார தேரர் யார் என்பது அனைவருக்கும் தெரியும்.

இனங்களை இலக்கு வைத்து பிரசாரம் செய்யும் ஒருவர் தலைமையில் ஒரே நாடு, ஒரே சட்டம் எனும் ஜனாதிபதி செயலணி ஏன் அமைக்கப்பட வேண்டும்? இதன் நோக்கம் தெளிவாகிறது.

இனவாதம், மதவாதம் உள்ளிட்ட விடயங்களைக் கைவிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அதேபோல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துக்கு நீதி கோரிய அருட்தந்தையர்கள் தற்போது சி.ஐ.டிக்கு அழைக்கப்படுகின்றனர். இது நிறுத்தப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)


கண்ணீர் அஞ்சலி



அமரர். திரு. வே.தி.செல்வரட்ணம்

யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரியின் முன்னாள் அதிபரும் கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் முன்னாள் வடமராட்சி, யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளருமான

வே.தி. செல்வரட்ணம்

நேற்று முன்தினம் (29.10.2021) காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2907)

பழைய மாணவர் சங்கம்,
யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.



கண்ணீர் அஞ்சலி



வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களின் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும் முன்னாள் யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான

அமரர்

வே.தி.செல்வரட்ணம்

(முன்னாள் பிரதிச் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்)

அவர்கள் கடந்த 29.10.2021 ஆம் திகதியன்று இறைபதமடைந்தார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2906)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

## சவேந்திர சில்வாவுக்கு பிரித்தானியாவில் தடை விதிக்கப்பட வேண்டும்

### பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையின் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவுக்கு பிரித்தானியாவில் தடை விதிக்கப்பட வேண்டும் என இங்கிலாந்தின் பிராந்திய பாராளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் டிம்ஸ் கோரிக்கையை விடுத்தார்.

இலங்கையில் போர்க் குற்றம் புரிந்தவர்களை தண்டிக்க இந்த தடை பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அமெரிக்கா உரிய நேரத்தில் இந்த தடையை விதித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

## திருப்திகரமான வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பிக்க முடியும்

### -பசில் நம்பிக்கை-

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டிற்கான திருப்திகரமான வரவு-செலவுத் திட்டத்தை தன்னால் சமர்ப்பிக்க முடியும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று சனிக்கிழமை வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (நி-5)

## சாரதிகள், நடத்துநர்களுக்கு தடுப்பூசி அட்டை கட்டாயம்

(கொழும்பு)

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சாரதிகளும் நடத்துநர்களும் முழுமையாக தடுப்பூசி பெற்றிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி அட்டையை சோதனை செய்வதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் கொமாண்டர் நிலான் மிரெண்டா குறிப்பிட்டார். பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படுவதுடன், நாளை முதல் மாகாணங்க ளுக்கு இடையிலான பேருந்து சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)

## கடும் மழையால் புத்தளத்தில் வெள்ளம்

(புத்தளம்)

நேற்று முன்தினம் மாலை முதல் பெய்த கடும் மழை காரணமாக புத்தளத்தின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.



புத்தளம் நகரின் நூர்நகர், கடையாக்குளம் ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்தமையால் சுமார் 150 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி-5)

## தொடருந்து சேவை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையில் இடைநிறுத்தப்பட்டிருந்த தொடருந்து சேவை மீளவும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மாகாணங்களுக்கு இடையிலான ரயில் சேவை நாளை முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. (நி-5)

## அரச சேவையில் நிலவும் பட்டதாரி வெற்றிடங்கள் தொடர்பில் கணக்கெடுப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு நிலவும் பதவி வெற்றிடங்கள் தொடர்பில் அரச நிறுவனங்களின் தகவல்களைத் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுச் சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்தது.

பொதுச்சேவையில் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட பயிலுநர் பட்டதாரிகளுக்கு நிரந்த நியமனம் வழங்கும் பொருட்டு இந்த தகவல்கள் திரட்டப்படுவதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

இதுவரை 53,000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பயிலுநர்களாக சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். (நி-5)

## இன்று ஒரு தகவல்

### பிராயச்சித்தம்

லண்டனில் ஒரு பிரபல குற்றவாளியைப் பொலிஸார் பிடிக்க நேர்ந்தது. பொலிஸிற்கு அவன் கொடுத்த வாக்குமூலத்தைக் கேட்ட பலருக்கு மிக வியப்பாக இருந்தது.

அவன் சொன்னான், எனக்காக வக்கீல் வைத்து வாதாடி நான் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்க என் குடும்பத்தினர் முயற்சி செய்கின்றனர். அவர்கள் அதில் வெற்றி பெற்றாலும் கூட நான் செய்த தவறுக்கு உரிய தண்டனையைப் பெற விரும்புகிறேன். இல்லாவிட்டால் என் மனமே என்னைச் சித்திரவதை செய்து கொன்றுவிடும்.

நான் சட்டத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்யும் போது என்னை வந்து பிடித்துக் கொள்ளுங்கள் என்று அடையாளம் காட்டும்படி ஏதாவது சில தடயங்களை என்னை அறிந்தே நான் விட்டுவிட்டுச் சென்று விடுகிறேன். இதற்கு என் உள் உணர்வு எனக்கு எதிராக வேலை செய்து என்னையும் சிக்கவைத்து விட எண்ணுவது தான் காரணம். சட்டம் தண்டிக்குமளவு பெரிய தவறுகளாக இல்லாவிட்டாலும் வாழ்வில் நாம் சில சிறு தவறுகளைத் தெரிந்தே செய்கிறோம். இத்தகைய சில தவறுகள் மனச்சாட்சி உள்ளவர்களுக்கு உறுத்தலை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும்.

நினைத்துப் பார்த்திராத வியாதிகள் வருவதற்கும் எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படுவதற்கும் காரணம் நாம் செய்த தவறுகளே என்று எண்ணுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இத்தகைய மனவேதனையில் இருந்து விடுபடுவதற்கும் அத்தவறுகள் நிகழா வண்ணம் இருப்பதற்கும் நாம் வழி தேட வேண்டும்.

அதாவது மனச்சாட்சியே நம்மைக் கொல்வதற்குள் நாம் ஒரு மருந்தைத் தேட வேண்டும். இல்லாவிட்டால், வெட்கமும் தாழ்வு மனப்பான்மையும் குற்றவுணர்வும் ஏற்பட்டு நம்மை நாமே வெறுக்கும் நிலை உண்டாகிவிடும். இத்தகைய மனநிலை பல வேண்டத்தகாத வியாதிகளை வரவழைத்தோ வரவழைக்காமலோ உடல் நிலையை உருக்கி அடையாளம் தெரியாமல் ஆக்கிவிடும் என்று மன இயல் நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

நம்மை அறிந்தோ அறியாமலோ நடக்கும் தவறுகளுக்கு நாம் பொறுப்பு ஏற்க வேண்டும். அவற்றுக்கு இணையான சிறு தண்டனைகளை நமக்கு நாமே விதித்துக்கொள்வதன் மூலம் நாம் மன நிம்மதி பெறலாம்.

நமக்குப் பிடித்த ஒரு பொருளைத் தியாகம் செய்யலாம். இறை பணிகளுக்காகச் செலவிடலாம். உடலை வருத்திக் கொள்ளக் கூடிய சிறு முயற்சிகளில் ஈடுபடலாம். இவ்வாறாக ஒவ்வொருவரும் தத்தம் இயல்புக்கேற்ப பிராயச்சித்தம் செய்து கொண்டால் மனதில் நிம்மதி பிறக்கும். குற்ற உணர்வு குறைந்து புத்துணர்வு பெற முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

நாட்டு மக்களின் பொறுப்பிலிருக்கும் அரசாங்கத்திற்கு குடியரசு என்று பெயர். மக்கள் எண்ணத்தின் பிரதிபலிப்பு சட்டத்தால் அங்கு ஏற்படுகிறது.
– மாஜினி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தடுப்பூசி ஏற்றாவிட்டால் அது சட்டத்தை மீறிய குற்றமா?

கோவிட் – 19 தொற்றுக் காரணமாக உலகம் படும் பாட்டைச் சொல்லிமாளா.

2019ஆம் ஆண்டு சீனாவில் ஆரம்பித்த கொரோனாப் பெருந்தொற்று உலக நாடுகள் முழுவதிலும் கொன்றொழித்த மனித உயிர்கள் கொஞ்சமல்ல.

இன்னும் அதன் கொடூரம் நின்றபாடில்லை.

சில நாடுகளில் கொரோனாத் தொற்று மீண்டும் வேகமெடுப்பதான தகவல்கள் இதயத்தைச் சுட்டெரிக்கிறது.

அந்தோ! கொரோனாப் பெருந்தொற்று என்றுதான் முடிவுக்கு வருமோ என்ற ஏக்கத்துடன் காலம் கடந்து செல்கிறது.

இதனிடையே கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்கான தடை மருந்தேற்றுவதில் நாடுகள் மும்முரமாக உள்ளன.

அதிலும் வெவ்வேறு நாடுகள் தயாரித்த தடை மருந்து குறித்த விமர்சனங்களைக் கேட்கும்போது அது மேலதிக தலையிடியாக அமையும்.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தடைமருந்தை ஏற்றியதால் உபாதைக்கு உட்பட்டவர்களும் மரணமடைந்தவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

அதிலும் சினோபார்ம் தடை மருந்தை ஏற்றியதால் இறந்து போனார் என்ற விமர்சனங்கள் ஊர்தோறும் இருக்கவே செய்கிறது.

அதிலும் குறிப்பாக இதயம் சார்ந்த நோய்க்கு ஆளாகி இருந்தவர்கள் சினோபார்ம் தடை மருந்தை ஏற்றிய நிலையில் மரணமடைந்ததான பதிவுகள் உண்டு.

தவிர, கொரோனாத் தடை மருந்தை ஏற்றிய பின்னர் கொரோனாத் தொற்றுக்கு ஆளானவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

தடை மருந்தை ஏற்றிய பின்னரும் கொரோனாத் தொற்று ஏற்பட்டது எனக் கூறும்போது; தடை மருந்து ஏற்றுவதனூடு கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதைவிட, உயிரிழப்பு என்ற ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்ற விளக்கத்தை மருத்துவத்துறை முன்வைக்கின்றது.

எதுவாயினும் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்குத் தடை மருந்தை ஏற்றிக் கொள்வதுதான் ஒரே வழி என்ற அடிப்படையில் தடைமருந்து ஏற்றுவதை ஊக்குவிக்கலாம்.

ஆனால் அதற்காக, தடைமருந்தை ஏற்றாமல் விட்டால் அது சட்டத்தை மீறிய குற்றமாகவோ அன்றி தண்டனைக்குரிய குற்றமாகவோ கருதப்படுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

தவிர, கொரோனாத் தடை மருந்தை ஏற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தை சுகாதாரத் துறை முன்வைக்குமென்றால் அது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

ஆம், சினோபார்ம் தடை மருந்தை ஏற்றியவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைய முடியாது என்ற கட்டுப்பாடு இருக்கும்போது, சினோபார்ம் மருந்தை ஏற்றாதவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதென்பது ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல என்பதை மட்டுமே இங்கு நாம் கூறமுடியும்.

## பொலிஸ் அதிகாரிகள் என தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவரை கடத்திச் சென்று ரூ. 10 இலட்சம் கப்பம் பெற்ற மூவர் கைது

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் எனத் தெரிவித்து கொழும்பு, கிராண்ட்பாஸ் மோலவத்த பிரதேசத்தில், குடும்பஸ்தர் ஒருவரைக் கடத்திச் சென்று சுமார் 10 இலட்சம் ரூபாவைக் கப்பமாகப் பெற்றுக்கொண்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள், கடத்தப்பட்டவரது வீட்டின் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி கப்பம் கோரியுள்ளதுடன் இவ்விடயத்தைப் பொலிஸாருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

அதற்கமைய கடத்தப்பட்டவரின் மனைவியால் தனியார் வங்கியொன்றில் 10 இலட்சம் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர் கடத்தப்பட்டவர் மாபொல பிரதேசத்தில் கொண்டுவந்து விடப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்டவரின் குடும்பத்தாருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இது தொடர்பில் ஆரம்பத்தில் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை. எனினும், நேற்று முன்தினம் இவ்விடயம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பற்றுச் சீட்டு, தொலைபேசி இலக்கம் என்பவற்றை வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைதுசெய்துள்ளனர். (ம-3)

## வவுனியாவில் பராமரிப்பு இல்லத்தில் 17 பேருக்கு கொரோனாத் தொற்று

(வவுனியா)

வவுனியாவில் விசேட தேவைக்குட்பட்டவர்களை பாராமரிக்கும் இல்லம் ஒன்றில் 17 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட பீசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில், விசேட தேவைக்குட்பட்டவர்களை பராமரிக்கும் இல்லம் ஒன்றைச் சேர்ந்த 17 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## மண் சரிந்து விழுந்ததில் பதுளையில் ஒருவர் உயிரிழப்பு

(பதுளை)

பதுளை எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்பே தோட்டம் பகுதியில் வீதியன் மது மண்சரிந்து விழுந்ததில் வீதியில் பயணித்த 29 வயது நபர் மரணமடைந்தார்.

திவுல்கஸ்தென்ன, ஹேலஹல்பே பிரதேசத்தை சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

சடலமானது, வீதியிலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவிலுள்ள நீர் நிலையிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கிளிநொச்சியில் விபத்து; முதியவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஏ9 வீதியில் பாதசாரி கடவையில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி ஏ9 வீதியில் நேற்று தனியார் வங்கி முன்பாக உள்ள பாதசாரி கடவையில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியை சேர்ந்த 75 வயதான முதியவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,100)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 01 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குட்செட்வீதி, பண்டாரிக்குளம், சேவாலங்கா- தவசிக்குளம், சிவன்கோவிலடி தோணிக்கல், தவசிக்குளம், தவசிக்குளம் பிள்ளையார் வீதியடி, தவசிக்குளம், தோணிக்கல், லக்ஸ பான வீதி, நீாவழுங்கல் (மதவு வைத்தகுளம்) குளோப் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும். (நி-4)

## மருத்துவக் குறிப்பு

உடல் உஷ்ணத்தால் நீர்க்கடுப்பு ஏற்பட்டால் நிறைய மோர் சாப்பிடலாம். அதில் எலுமிச்சைப் பழச்சாற்றை விட்டுச் சாப்பிட நீர்க்கடுப்பு போய்விடும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்.

❖உடலின் எப்பகுதியிலும் இருளின்றி உங்கள் உடல் முழுவதும் ஒளியாய் இருந்தால், விளக்குச் சுடர் முன் நீங்கள் ஒளிமயமாய் இருப்பதுபோல் அனைத்தும் ஒளிமயமாய் இருக்கும்."

❖உங்களுக்கு எவை தேவையென உங்கள் தந்தைக்குத் தெரியும். நீங்கள் அவருடைய ஆட்சியை நாடுங்கள் அப்பொழுது இவை உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்."

❖உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.

❖நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார்.

❖ விருந்து அளிக்கும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழையும். 14 அப்போது நீர் பேறு பெற்றவர் ஆவீர். ஏனென்றால், உமக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நேர்மையாளர்கள் உயிர்த்தெழும்போது உமக்குக் கைம்மாறு கிடைக்கும்"

## சிங்கள குடியேற்றங்களை நிறுவி

# தமிழரின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க அரசு சதி முயற்சி

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு



(குருமன்காடு)

**அநுராதபுரத்தின் எல்லைப் பகுதியில் இருக்கக் கூடிய கிராமங்களை வவுனியா வடக்கு பிரதேச சபைகளுடன் இணைத்து எல்லை நிர்ணயம் என்ற பெயரில் சிங்கள மக்களை வவுனியா மாவட்டத்தில் அதிகரித்துக்காட்டி இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க அரசாங்கத்தால் சதி முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

வவுனியா, பழைய பேருந்து நிலையம் முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த விடயம் தொடர்பில் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் மகஜர் ஒன்றை கையளித்து இருந்தோம்.

அந்த நவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும், அவசரமாக அமைச்சரை சந்திக்க வேண்டும் எனவும் அதில் தெரிவித்திருந்தோம்.

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளும் அந்தக் கடிதத்தில் கையொப்பம் இட்டன.

அதற்கமைய சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கியிருந்தும் கூட, கடைசி நேரத்தில் அந்த சந்திப்பு இரத்து செய்யப்பட்டு இதுவரை அந்த சந்திப்புக்குரிய நேரம், நாள் ஒதுக்கப்படாது அரசாங்கம் நழுவிப் போகிறது.

இதனால் நாங்கள் எதிர்ப்பு போராட்டத்தை தொடங்கியுள்ளோம்.

தமிழ் பிரதேசங்களை சிங்களமயமாக்கல் என்ற ரீதியில் இந்த நடவடிக்கை மட்டுமல்ல, மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை காணிகளை அபகரித்து சிங்கள எல்லைப் பிரதேசங்கள் மற்றும் பொலநறுவை மாவட்டம் என்பவற்றுடன் சேர்த்துக் கொள்ளும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

ஆகவே, திட்டமிட்ட வகையில் எல்லா கோணங்களிலும் தமிழர்களை நசுக்கி தமிழர்கள் தொடர்ந்தும் இந்த தீவில் ஒரு தேசமாக வாழ முடியாத நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் அதாவது ஒரு இனவழிப்பு செய்யும் நோக்கோடு இலங்கை அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என மேலும் தெரிவித்தார். (4-5-250)

## மணல் அகழ்வு இடங்களை பார்வையிட வந்த அதிகாரிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மருதங்குளத்தின் நீரேந்தும் பரப்பில் மணல் அகழ்வுக்கு அனுமதியளிக்க வந்த அதிகாரிகளுக்கு புத்துவெட்டுவான் கிராம விவசாயிகளும் மக்களும் கடும் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மருதங்குளப் பகுதிக்கு புவிசரிதவியல் சுரங்கப் பணியகம், வனவளத் திணைக்களம், காணி அதிகாரி, புத்துவெட்டுவான் கிராம உத்தியோகத்தர் ஆகியோர் வருகை தந்து குளத்தின் பின் பகுதியில் மணல் அகழ்வுப் பகுதியைப் பார்வையிட்டனர்.

அவ்விடத்திற்கு விரைந்த விவசாயிகளும் மக்களும் மருதங்குளம் கடந்த பத்தாண்டுகளில் இரு தடவைகள் உடைப்பெடுத்தது.

இவை முழுமையாக புனரமைக்கப்படவில்லை. இந்நிலையில் குளத்தின் பின்பகுதியில் மணல் அகழ்வு நடைபெற்றால் குளத்திற்கு வேகமாக வருகின்ற வெள்ளம் குளத்தின் அணைக்கட்டு உடைப்பதற்கு சாத்தியம் உள்ளது.

இதனைவிட மணல் அகழ்வு இடம்பெறும் பகுதியில் குளத்திற்கு அரணாக பாலை, மருத மரங்கள் உட்பட பல வகையான மரங்கள் காணப்படுகின்றன. மணல் அகழ்வு நடைபெற்றால் இவை அழிவடையும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் முறைப்பாடு செய்ய உள்ளதாகவும் புத்துவெட்டுவான் மக்கள் தெரிவித்தனர். (4-5-350)

## கிராம வாசிகளின் தாக்குதலில் முதலை உயிரிழப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு உடையார்கட்டு மூங்கிலாறு தெற்கு கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த முதலை கிராம வாசிகளின் தாக்குதலில் உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. மரணச்சடங்கு ஒன்றில் கூடியிருந்த மக்களை முதலை தாக்குவதற்கு முயற்சித்த நிலையில் கிராமவாசிகளின் தாக்குதலில் குறித்த முதலை உயிரிழந்தது. (4-5-350)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியா, கிளிநொச்சியில் போராட்டம்

(நெளுக்குளம்)

வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




நேற்றுக்காலை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதன்போது, எங்கே எங்கே உறவுகள் எங்கே, கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே போன்ற கோசங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எழுப்பியிருந்ததோடு, உங்கள் இராணுவத்தின் உறுதிமொழியை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள், தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா, ஐந்து வயது குழந்தையும் ஆயுதம் ஏந்தியதா போன்ற பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-100-299)

## அபிப்பிராயங்களை சமர்ப்பிக்கவும்

(பனிக்கன்குளம்)

கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் தமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் பொது மக்களிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கென புதிதாக வடிவமைக்கப்படவுள்ள சபைக் கொடி, கீதம், இலச்சினை, மற்றும் சபை மகுடவாசகம் என்பவற்றுக்கு பொதுமக்கள் தங்கள் ஆலோசனைகள், அபிப்பிராயங்கள், மாதிரிகள் என்பவற்றை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அன்றி சபை தொலைநகல் (021 229 0001) மூலமாகவோ அல்லது சபை மின் அஞ்சல் pskpattu @gmail.com மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-281)

## 19 பேர்...

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13, 725 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## யாழ்.பல்கலை...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 6 சிரேஸ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவியுயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து சத்திரசிகிச்சைத் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி சி.ராஜேந்திரா, சத்திர சிகிச்சையில் பேராசிரியராகவும் மருத்துவத் துறைத் தலைவரும் சிரேஸ்ட விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி என்.சுகந்தன், மருத்துவப் பேராசிரியராகவும், மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் துறைத் தலைவரும், சிரேஸ்ட விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் நிபுணருமான வைத்திய கலாநிதி கே.முகுந்தன், மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்குப் பேரவை ஒப்புதலளித்துள்ளது.

இவர்களுடன், கலைப்பீடத்தில் இருந்து, பீடாதிபதியும் புவியியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளருமான கலாநிதி கே. சுதாகர், தமிழ்த் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி (செல்வி) எஸ்.சிவசுப்ரமணியம், பொருளியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.விஜயகுமார் ஆகியோரை முறையே புவியியல், தமிழ், பொருளியல் துறைகளில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கும் பேரவை ஒப்புதலளித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரே தடவையில் அதிக எண்ணிக்கையான பேராசிரியர் பதவியுயர்வுகள் வழங்கப்படுவது இதுவே முதன்முறையாகும். (ம-3,18,33)

## பணவீக்கம்...

அதிகரிக்கக் கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் 6 - 7 சதவீதமாக இருந்த பணவீக்கம், அடுத்த சில மாதங்களில் சுமார் 8.5 சதவீதமாக அதிகரிக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் 2022ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் பணவீக்கமானது 4 முதல் 6 வீதம் என்ற மட்டத்திற்கு குறையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வடக்கில்...

தொடர்ந்து நிலைகொண்டுள்ளது.

இது தொடர்ந்து ஈரப்பதன் மிகுந்த காற்றை தன்னுள் ஈர்ப்பதனால் இலங்கையின் பல பகுதிகளில் எதிர்வரும் 03ஆம் திகதிவரை தொடர்ச்சியான மழைக்கு வாய்ப்புள்ளது.

அதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக கனமழை முதல் மிகக் கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் தொடர்ந்தும் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும்.

அதேவேளை எதிர்வரும் 09ஆம் திகதி அன்று வங்காள விரிகுடா கடற்பகுதியில் மற்றொரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தரம் 10, 11, 12...

கொண்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 8ஆம் திகதி முதல் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் தரம் 10, 11, 12 மற்றும் 13 வரையான வகுப்புக்களை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுகாதார வழிகாட்டுதல்கள் கிடைத்தவுடன் உடனடியாக தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புக்களை மீண்டும் ஆரம்பிக்க தயாராக உள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## விபரீத முடிவெடு...

இடம்பெற்றுள்ளது.

இதில் ரஞ்சன் சர்மா வர்சிகா (வயது-16) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றிருந்தார்.

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## நீதியமைச்சராக...

மானது அனைத்து இனங்களுக்கும் நியாயமான வகையில் செயற்படத் தடையாக இருக்கும் என்பது நீதியமைச்சரின் நிலைப்பாடு எனக் கூறப்படுகிறது.

முஸ்லிம் சமூகத்தின் சமய தலைவர்களான மௌலவிகள், அமைச்சரிடம் தமது கடும் எதிர்ப்பை முன்வைத்துள்ளதை அடுத்து, அமைச்சர் தனது எதிர்ப்பை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார்.

ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணிக்குழு தொடர்ந்தும் இயங்கினால், தன்னால் நீதியமைச்சராக சேவையாற்ற முடியாது என அலி சப்ரி கூறியுள்ளதாக கூறப்படுகிறது. (ம-3)

## பாரதூரமான...

சிப்பார்கள்.

நாட்டுக்காக அமைச்சு பதவிகள் மற்றும் அனைத்தையும் துறக்க தயார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாட்டைப் பாதுகாக்கும் எமது போராட்டத்திற்கு அனைவரும் எம்முடன் ஒன்றிணைய வேண்டும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

யுகதனவி மின்நிலைய பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு அரசாங்கத்தின் 11 பிரதான பங்காளி கட்சியினர் ஒன்றிணைந்து கொழும்பில் "மக்கள் பேரவை" மாநாட்டை நடத்தினர். அந் நிகழ்வில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## மேலும்...

பய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர இந்த விசேட வர்த்தமானிஅறிவித்தலை நேற்று முன்தினம் வெளியிட்டார். (ம-3)

## வல்...

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் இராணுவத்தினரால் நேற்று நண்பகல் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கைதானவர்கள் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ம-3, 18,33,60,100)

## 9...

பவுண் நகை மற்றும் பணம் ஆகியன திருட்டுப் போயிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வீட்டில் தனித்திருந்த பெண் அருகில் உள்ள வீட்டிற்கு உறங்கச் சென்ற சமயமே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் சி.சி.ரி.வி கமரா பொருத்தப்பட்டுள்ளபோதிலும் திருடர்கள் அதன் பதிவுகள் அடங்கிய இலத்திரனியல் உபகரணத்தையும் எடுத்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3.30)

## யாழில் பல...

மாக யாழில் பல இடங்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளன.

கந்தர்மடம் சந்திக்கு அருகில் அரசடி வீதியில் பல வீடுகளுக்குள்ளும் வர்த்தக நிலையங்கள் சிலவற்றிற்குள்ளும் வெள்ள நீர் உட்புகுந்தது.

இதனால், வீடுகளில் வசித்தவர்களும், வர்த்தகர்களும் பெரிதும் அவதிக்குள்ளாகினர். (ம-3,18)


**சொர்க்கம் திருமண சேவை**

கனடாவில் வாழும் 26 வயது 2 இல் சூரியன், செவ்வாய் கேட்டை நட்சத்திர மணமகளுக்கு படித்த மணமகனை இலங்கையில் தேடுகின்றோம்.

கனடாவில் வாழும் 31 வயது செவ்வாய் குற்றமற்ற திருவாதிரை நட்சத்திர மணமகளுக்கு இலங்கையில் மணமகளை தேடுகின்றோம். (8444)

0014166661855 www. sorkham.com

021 222 1515/ 077 650 5097

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 30/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1156
வெற்றி இலக்கங்கள்
மீனம் 1 9 8 5 9 1
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 30/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0919
வெற்றி எழுத்து / வெற்றி இலக்கங்கள்
C 20 21 29 51 73

**மஹஜன சம்பத**
திகதி 2021/10/30
சீட்டிழுப்பு இலக்கம் 4571
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 9 5 2 0 8 5
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 30.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2866
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
M 21 38 59 64
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**
திகதி - 2021.10.30
சீட்டிழுப்பு இலக்கம் - 601
B 09 37 51 52
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 252 4324

**கப்ருக** (அதிர்ஷ்ட லாபம்)
சீட்டிழுப்பு வாரம் 097
சீட்டிழுப்பு திகதி 30.10.2021
வெற்றி இலக்கங்கள் 15 18 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 100,000.00/=
அபிவிருத்தி லொத்தர் சபை

**அத கோடிபதி**
தினம் : சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1374
சீட்டிழுப்பு திகதி: 30.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,557,532
வெற்றி இலக்கங்கள் 16 19 24 27 ஆங்கில எழுத்து E
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா**
தினம் : சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3709
சீட்டிழுப்பு திகதி: 30.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,420,986.30
வெற்றி இலக்கங்கள் 18 23 43 59 ஆங்கில எழுத்து Z
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி**
சுப்பர் ஜக்பொட் 3,696,516.00/=
திகதி : 30.10.2021
வெற்றி வாரம் : 3260
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் 05 20 44 59 துலாம்
6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1548
சீட்டிழுப்பு திகதி 30.10.2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் T 11 25 41 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் 68,018,696.00/=

**சவ்பாக்ய** உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 455
திகதி 30.10.2021
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 15 44 58
விதி எண் 4
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,409,248
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மிக்சர் கம்பனிக்கு பெண் வேலையாட்கள் தேவை. (8430)

**077 016 3267**

## வாடகைக்கு

கே.கே.எஸ் வீதி, இணுவிலில் வீடு வாடகைக்கு உண்டு. (8424)

**077 500 0167**

## கட்டடம் வாடகைக்கு

கிளிநொச்சி A9 வீதியில் Softlogic Showroom இற்கும் DFCC வங்கிக் கிளைக்கும் இடையில் பன்சலைக்கு முன்னால் உள்ள கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு. (8433)

**077 502 1539**
**070 602 1539**

## நாட்டில் மேலும் 564 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் மேலும் 564 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 539,980 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## காணி விற்பனைக்கு

பிரம்படி லேன் 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(வெட்டுக் கிணறு) (C-2912)

**076 702 3565**

## வணிகக் கல்வியும் கணக்கீடும்

- தரம் 10 மற்றும் 11 மாணவர்களுக்கான வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் வகுப்புகள் குழுவாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ நேரடியாக கற்பிக்கப்படும்.
- சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொள்ளப் போகும் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள் வகுப்புகள்.
- Whiteboard முறை அல்லாத நவீன முறையிலான Zoom வகுப்புகள். (8445)

**076 223 5507**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 9 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

1 3/4, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்,
மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.
தரகர் தேவையில்லை.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (8428)

**077 814 7389**
**077 614 7333**

## கனடாவில் உடனடி வேலைவாய்ப்பு

### கடல் தொழிலாளர்கள்

மீன்பிடித்தலில் அனுபவம் உள்ளவர்கள்
கடல் சார் கற்கை நெறிகள் சான்றிதழ்கள்
வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**Cook** மேலை நாட்டு உணவு தயாரிப்பில் அனுபவம் உள்ளவர்கள்

ஏனைய வேலைவாய்ப்புக்கள்

- Industrial Butcher
- Carpenter
- Welder
- Furniture
- Electrical power line & cable workers
- Industrial Electricians
- Electricians
- Plumber
- Food Service Supervisor
- Administrative assistant

(C-2832)

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

**0777-068-777**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு வெல்டிங், லேத் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். (8404)

**077 244 8216**

## பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு நம்பகரமான வீட்டுப் பணிப்பெண் ஒருவர் தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு (8442)

**076 826 4329**

## உடனடி வேலை வாய்ப்பு

Got pests? Get active

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் Leading Pest Control கம்பனிக்கு பணியாளர்கள் தேவை.

**Labour/ Technicians**

- 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆரம்பச் சம்பளம் + EPF/ETF + சலுகைகள்.
- வாகனம் செலுத்த தெரிந்திருத்தல் அவசியம்.

**Sales Representative**

- குறைந்தது 2 வருட அனுபவம்.
- ஆரம்பச் சம்பளம் + EPF/ETF + சலுகைகள்.
- 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- வாகன அனுமதி பத்திரம் அவசியம்.

தங்களது சுயவிபரத்தை (CV) termite.com@gmail.com அல்லது இல.6, புகையிரத லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். **076 315 6802/021 492 7626** (C-2911)

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2831)

**0768226240** DHL

## இலவச அறிமுகக் கருத்தரங்கு (Free)

Zoom Classes - Geography A/L (2021, 2022/2023 Batches) மற்றும் O/L மாணவர்களுக்கானது. 01/11/2021 திங்கட்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 7 மணி வரையும் Meeting ID: 884 7634 8517
pass code: Geo2021 (8441)
Whatsapp **076 055 4530**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் லக். சூரியன், செவ்வாய் மூலம் 3 ஆம் பாதம் 02.07.1985 பாவம் 38 1/2
Business management(London)
Shop - Stanly Rd, Jaffna. (8418)

தொடர்பு

**077 284 2943**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 இல் பிறந்த பூசம் நட்சத்திரம் சூரியன் - செவ்வாய், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் 1982 இல் பிறந்த கணக்காளர், அனுச நட்சத்திரம். மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை. (8412)

**071 886 6416**

## பணிப்பெண் தேவை

சண்டிலிப்பாய் பகுதியில் தங்கியிருந்து குழந்தையை பராமரிக்க 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.

**077 399 1244** (8448)

## கணக்காளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் பதவிக்கு வேலையாள் உடன் தேவை. O/L, A/L கல்வித் தகைமையுடன் (ஆண்/ பெண்) விண்ணப்பிக்கலாம். (8406)

**077 244 8216**

## கண்ணீர் அஞ்சலி



தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் முன்னாள் போசகரும் முன்னாள் தலைவருமான

### திரு. வே. தி. செல்வரட்ணம்

(ஓய்வுநிலை பிரதிச் செயலாளர் - மாகாணக் கல்வி அமைச்சு, வட மாகாணம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வட மாகாணம்,
வலயக் கல்விப் பணிப்பாளர் - யாழ். மற்றும் வடமராட்சி)

அவர்கள் 29.10.2021 அன்று இயற்கையெய்தினார்.
அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு : 05.01.1948
உதிர்வு : 29.10.2021

(C-2909)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்

## சிங்கள வகுப்பு (Quickly)

நீங்கள் சிங்களம் கதைக்க ஆசைப்படுகிறீர்களா?
தொடர்பு கொள்ளுங்கள் (8440)

**077 345 0645**

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (8436)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

## நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 03 நாட்களே

### அமெரிக்க அதிஸ்ட விசா



ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

55000 இலவச விசாக்கள்

**0768226244**

எமது குடும்பத்திற்கு ஒரு விண்ணப்பம் போதும் எண்ணத்துடனேயே வந்திருந்தோம், ஆனால் V2 Travels இனர் ஒரு குடும்பத்தினருக்கான இரண்டாவது சந்தர்ப்பத்தில் உள்ள அனுகூலத்தினையும் தெரியப்படுத்தி ஊக்கப்படுத்தினார்கள். அவர்கள் சொன்னது மாதிரியே எமக்கான அதிஸ்டவிசா எமது இரண்டாவது விண்ணப்பத்தின் மூலமே கிடைத்தது. எமது அமெரிக்கா நோக்கிய பயணம் வரை கூடவே இருந்து வழிகாட்டிய V2 Travels இனருக்கு கடவுளுக்கு அடுத்தபடியாக நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். (C-2833)



நிவேதிதா குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

**V2 Travels**

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 316

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 31.10.2021 தொலைபேசி : 021 222 3378



## எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்




## விஸ்வரூபமெடுக்கும் போராட்டம்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஒரேநாடு- ஒரே சட்டம் என்ற மகுட வாசகத்துடன் அரசியலமைப்பைத் தயாரிக்கின்ற ஜனாதிபதி செயலணியில் தமிழர்களுக்கு இடம் கொடுக்கல்ல. இதை ஆலடி மாநாட்டில வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் விதானையார் விசுவலிங்கத்திற்குக் கடும் கோபம் வந்தது.

விதானையார்: பண்டிதர் ஐயா நாங்கள் கண்டித்து என்ன பயன். தமிழர்களை அழித்தொழிக்க வேணும் என்பது சிங்களப் பேரினவாதத்தின்ர இரத்தத்தோட கலந்திருக்குது. அதாலதானே பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள் சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் என்ற ஒரு புத்தகத்தை எழுதினவர். சிங்களவர்கள் சுட்ட மண் எண்டால் தமிழர்கள் பச்சை மண்.

சுட்டமண்ணும் பச்சை மண்ணும் எப்படி ஒட்டாதோ அதேபோல சிங்களவர்களும் தமிழர்களும் சேர்ந்து வாழ்வதென்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

மூப்பர்:தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதாக புதிய அரசியலமைப்பு இருக்க வேணும் எண்டு இந்தியா வலியுறுத்துதாம்.

விதானையார்: இது கூட்டமைப்பின்ர நாடகம். சும்மா தூதுவர்களைச் சந்திக்கிறது, கையை உருக்கி கதைக்கிறதும் தானே சம்பந்தரின்ர வேலை.

எவ்வளவு காலமா இந்தியா கதைக்குது. இந்தியா கதைச்சத்திலே ஒரு வீதத்தையாவது இலங்கை அரசாங்கம் செய்திருக்கோ...

சும்மா இந்தியா கதைக்குது... இந்தியா கதைக்குது... எண்டு சொல்லிச் சொல்லியே தமிழர்களின்ர எதிர்காலத்தை சம்பந்தர் நாசமறுத்துப் போட்டார்.

(இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடியில் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.)

சிறாப்பர்: விதானையார் சொல்லுறதில நூறு வீதம் உண்மை இருக்குது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அவர்களுக்கு தேர்தல் அரசியல்தான் முக்கியம். தமிழ் மக்களின்ர பிரச்சினைகள் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

கங்காணி: ஏன் சிறாப்பர் அப்படிச் சொல்லுறியள்.

சிறாப்பர்: தமிழ்மக்களின்ர பிரச்சினை தீர வேண்டுமெண்டு கூட்டமைப்பு நினைந்திருந்தால், இந்தியத் தூதுவருடனான சந்திப்பின் போது நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அந்தச் சந்திப்பில் சேர்த்திருக்க வேண்டும். ஏன்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர அங்கத்துவப் பிரதிநிதிகளைக் கூட சந்திப்பில் சேர்த்துக் கொள்வதில்லை எனும் போது இந்தியத் தூதுவருடனான சந்திப்பு எதற்கானதென்பது தெரிகிறதுதானே.

(ஆலடியில் மிகவும் அமைதியாக இருக்கக் கூடிய சிறாப்பர் கனகசபை கடும் கோபத்தோடு இவ்வாறு கூறியதும் ஆலடியில் மீண்டும் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்)

பண்டிதர்: தமிழ் மக்களை சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றியதை விட தமிழ் அரசியல் தரப்புகள் ஏமாற்றினதுதான் அதிகம். இதற்கெல்லாம் என்றைக்கோ ஒருக்கா பாடம் படிக்க வேண்டித்தான் வரும்.



பனை அபிவிருத்திச் சபையில் தமிழர்கள் தலைவர்களாக இருந்து என்ன செய்தவியள்?

சாத்திரியார்: பண்டிதர் ஐயா நீங்கள் சொல்லுறதை நான் எண்டால் நம்பமாட்டன். எங்கட சனங்கள் மாற்றுவழி பற்றிச் சிந்திக்கமாட்டினம். ஏதோ அந்தக் காலம் தொடக்கம் அவையளுக்குத் தான் நாங்கள் வாக்களிக்கிறது. அதை மாற்றுவது சரியல்லத் தானே எண்டு ஏதோ கோவில் திருவிழாவில தேர்த்திருவிழா உபயம் செய்வது போலத் தானே எங்கட சனங்கள் தேர்தலைப் பார்க்கினம்.

நிலைமை அப்படி இருக்கும் போது மாற்றம் பற்றிய சிந்தனை எப்படி ஏற்படும். எல்லாம் நாங்கள் செய்த ஊழ்வினைப் பயன்தான்.

சாத்திரியார் சதாசிவம் பெருமூச்சு விட்டவாறு கூறி முடித்தார்.

கங்காணி: ஜனாதிபதி செயலணியில தமிழருக்கு இடமில்லை எனும்போது அரச தரப்புடன் இருக்கிற தமிழ் அரசியல் தரப்புகள் மௌனமாக இருக்கினம். ஆனால் ஜனாதிபதி செயலணியில முஸ்லிம் மக்களுக்கு இடம் கொடுக்கவில்லை எண்டால், முதலில அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது ஆளுந்தரப்போட இருக்கிற முஸ்லிம் எம்.பிக்களாகத்தான் இருக்கும். ஆனால் எங்கட தமிழர்...

வாத்தியார்: சரி... சரி...ஆளுந்தரப்பிற்கு எதிராக இருக்கிற தமிழ் எம்.பிக்களில் சிலர் அரசுக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கும் போது மற்றவர்களை நாங்கள் குறைபட்டு என்ன செய்யமுடியும்.

விதானையார்: உண்மைதான் வாத்தியார். இந்தாப் பாருங்க. பனை அபிவிருத்திச் சபைக்குச் சிங்களவர் ஒருவர் தலைவராக நியமிக்கப்படப் போகிறார் எண்டால் எங்கட நிலைமை எப்படி எண்டு பாருங்களன்.

மூப்பர்: பனை அபிவிருத்திச் சபையில் தமிழர்கள் தலைவர்களாக இருந்து என்ன சாதிச்சவையள். எல்லாம் மந்தமான நிர்வாகம்தானே. பனை அபிவிருத்திச் சபையில வேலை செய்கிற வெளிக்கள உத்தியோகத்தர்களோட றெலிபோனில தொடர்பு கொள்ளுறது எண்டாலே முடியாத காரியம்.

நிலைமை அப்படி இருக்கும்போது சிங்களவர் ஒருவர் தலைவராக வந்தால் சில வேளை பனை அபிவிருத்திச் சபையின் நிர்வாக வேலையாவது ஒழுங்கா நடக்கும் எண்டு அந்தச் சபையில நேர்மையாகப் பணியாற்றுகிறவர்கள் முணுமுணுக்கினம்.

இவ்வாறு மூப்பர் சொல்ல அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# "ஒரே நாடு ஒரே சட்டம்" தமிழினத்திற்கும் பொருந்துமா?

"நாடிழந்து, நகரிழந்து, ஊர் இழந்து, வீடிழந்து, ஆறடி நிலம் இழந்து, 13 பேர் அங்கம் வகிக்கும் ஒரு குழுவில் கூட அங்கம் இழந்து நாதியற்றுக் கிடக்கிறது தமிழினம் என்பது வருத்தத்திற்குரிய விடயமாகிறது."

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி" இவ்வாறு ஒரு பழமொழி உண்டு.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்பு வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி என்பதற்குள் இந்த உலகின் மூத்த குடி தமிழ்க்குடி என்பதுடன் தமிழர் வீரம்மிக்க இனம் என்பதையும் நாசுக்காக "வாளொடு முன் தோன்றிய" எனும் பதத்தினூடே புகுத்தப்பட்டிருக்கும் அப்பதம் உணர்த்தி நிற்கிறது.

அவ்வாறான தமிழினத்தின் வீரத்தையும் வரலாற்றையும் பல பண்டைய சின்னங்கள் இன்றும் நினைவுபடுத்தி நிற்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

இவ்வாறு உலகைஆட்சி செய்து புகழின் உச்சியில் இருந்த தமிழினத்தின் வீழ்ச்சிக்கு காரணம் என்ன? என்பதைத் தேடுவது இப்பத்தியின் நோக்கமல்ல. அதற்கு ஒருவரியில் பதில் கூறுவதாக இருந்தால், "துரோகம்" என்பதை மட்டும் கூறிமுடித்து விடலாம்.

இலங்கைத் திருநாட்டை காலனித்துவ ஆட்சியாளர்கள் விடுவித்து சுதந்திரம் வழங்கிய போது அந்த நாடு இருந்த நிலை இப்போது இருக்கிறதா? என்ற கேள்வி எம் ஒவ்வொருவரிடமும் எழாமல் இல்லை.

என்ன செய்ய, அன்று இலங்கையில் வாழும் மூவினமும் ஒன்றாய்- ஒற்றுமையாய்- அழகாய் வாழ்வோம் என்ற உறுதிமொழியினால் இன்று சிறுபான்மை இனம் அடிமைப்பட்ட இனமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தனக்கான சுதந்திரத்தை வழங்கக்கோரி- எமது அடையாளங்களை அழிப்பதை நிறுத்தக் கோரி- எமது பிரதேசங்களை அடாத்தாய்ப் பிடிப்பதைத் தடுக்கக்கோரி தமிழினம் மேற்கொண்ட அறவழிப் போராட்டங்கள் எவையும் பலன் தராததன் விளைவு இளைஞர் இடத்தே ஆயுதம் ஏந்த வழிவகுத்தது.

தமிழினத்திற்கான அந்த ஆயுதப் போராட்டம் உலக நாடுகளின் ஒத்துதல்களுடன் 2009 இல் மௌனிக்கப்பட்டதன் விளைவு பல்லாயிரம் தமிழ்மக்கள் மாண்டு போனதைத் தவிர வேறு எதையும் தந்துவிடவில்லை.



அடடா! பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டது. இனி இலங்கையில் சமாதான மலர் பூத்துக் குலுங்கும் என சர்வதேசத்திற்கு உரையாற்றினர் ஆட்சியாளர்கள். அந்த சமாதான மலர் இன்றுவரை பூத்துக்குலுங்குவதாய் இல்லை.

மாறாக, அது வெறும் வர்ணம் பூசப்பட்ட வார்த்தை மலராகவே காணப்படுகிறது. இதற்கு எங்கே தவறு என்பதைத் தேடிப்பிடிக்க தமிழினத்தினால் முடியவில்லை.

ஆனால், பெரும்பான்மை இனத்திற்கு தமிழினம் என்றால் பயங்கரவாதிகள் என்ற எண்ணக்கரு அவர்கள் ஆழ்மனங்களில் பதியப்பட்டுள்ளமை புலப்படுகின்றது. அதனை ஆமோதிக்கும் வகையில் ஆட்சியாளர்களின் பல நடவடிக்கைகள் அமைந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

ஆம், தற்போது ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டிருக்கும் "ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணி விடயம் தற்போது பேசுபடுபொருளாக மாறியுள்ளது.

"ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் 13 பேர் கொண்ட குழுவிற்கு தலைவராக ஞானசார தேரர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் தமிழ் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இல்லாது சிங்கள, முஸ்லிம் உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளமை தமிழினத்தை ஆட்சியாளர்கள் தொடர்ந்து கீழ்நிலைப் படுத்துகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

"ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியில் தமிழ் உறுப்பினர்கள் எவரும் இல்லை எனின், "ஒரே நாடு ஒரே சட்டம்" எனும் சொற்பதமே பிழைத்துப் போய்விட்டதாய் பல எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ள நிலையில் தற்போது தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இணைத்துக்கொள்வதாய் ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இது செருப்பால் அடித்து விட்டு பட்டுக்குஞ்சம் வீசுவதற்குச் சமமானது என்பதைத் தமிழினம் நன்கு புரிந்து கொள்ளும் என்பதை ஆட்சியாளர்கள் மறந்து விடக்கூடாது.

ஒட்டுமொத்த தமிழினத்தையும் எதிரியால் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் ஆட்சியாளர்கள் தம்முடன்கூட இருக்கும் தமிழ் அமைச்சர்களையோ, பாராளுமன்ற உறுப்பினர்களையோ மனதில் நினையாமல் இவ்வாறான செயலைச் செய்துள்ளனர் எனின், அரசுடன் நிற்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அவர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்கள் ஆகியோரையும் புறக்கணித்துள்ளனர் என்பதே மெய்யாகிறது.

இங்கு நீதிமன்றத்தை அவமதித்த வழக்கில் தண்டனை அனுபவித்த துறவி ஒருவரை குறித்த "ஒரே நாடு ஒரே சட்டம்" செயலணியின் தலைவர் ஆக்கியமை குறித்தும் அதில் தமிழ்ப் பிரதிநிதிகளை இணைக்காமை குறித்தும் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடமாகாண முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் கடும் கண்டனம் வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்து பல்வேறுபட்ட தரப்பினரும் தமது எதிர்ப்பை வெளியிடத் தொடங்கி விட்டனர்.

இந்த நாடு சிங்கள பௌத்தத்திற்கே சொந்தமானது. இங்கு மற்றைய சிறுபான்மையினர் வாழலாம். ஆனால் இந்த நாட்டில் உரிமை கொண்டாட முடியாது என வெளிப்படையாகப் பேசிய பெரும்பான்மை ஆட்சியாளர்களின் தமிழினத்திற்கு எதிரான மற்றுமொரு பொய் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளது.

மணிகே மகே ஹிதே எனும் சிங்களப் பாடல் யூடியூப் தளத்தினூடே வெளியாகி உலக நாடுகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

அதையடுத்து அந்தப் பாடலைப் பாடிய யோகானி டி சில்வாவுக்கு பல பாராட்டு மழைகள் பொழிந்தவண்ணம் உள்ளன. இலங்கை என்கிற சிறிய நாட்டை உலகிற்கு யோகானி டி சில்வா அறிமுகப்படுத்தி வைத்து விட்டார் என்றவாறாக பலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் இற்றைக்கு இரண்டு தசாப்தத்திற்கு மேலாக இலங்கை என்ற சிறிய நாட்டைச் சேர்ந்த ஈழத்தமிழினம் அகதியாய்ப் புலம்பெயர்ந்து உலகிலுள்ள மூலைமுடுக்கெங்கும் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையை அதிகம் அடையாளப்படுத்தியவர்கள் ஈழத்தமிழர்களே.

ஆக, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து வாளொடு முன் தோன்றிய மூத்த குடியான தமிழ்க்குடி இன்று நாடிழந்து, நகரிழந்து, ஊர் இழந்து, வீடிழந்து, ஆறடி நிலத்தையும் இழந்து 13 பேர் அங்கம் வகிக்கும் ஒரு குழுவில்கூட அங்கம் இழந்து நாதியற்றுக் கிடக்கிறது என்பதே வருத்தத்திற்குரிய விடயமாகிறது.

அபிமன்யு



# சிறுவர் அரங்கம்

## எங்கிருக்கிறது புதையல்



ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தறுவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதைப் பற்றிக் கவலையாக இருந்தார்.

ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார்.

அது மட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தைக் குறிப்பிட்டு, ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள்.

அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை.

ஒருவேளை, அப்பா இரண்டடி என்று சொல்வதற்கு பதிலாக ஓரடி என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

இவ்வளவு தூரம் வந்த பின் எப்படி விட முடியும் என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே.

அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் சரி தோண்டியது வீணாக வேண்டாம் என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்கு அதிகமான பணம் கிடைத்தது.

இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

எந்தச் செயல் செய்தாலும், அதைப் பாதியில் நிறுத்தி விடாமல், விடாமுயற்சியுடன் செய்தால் கண்டிப்பாகப் பலன் கிடைக்கும்.

# மகாபாரதம்




பூஜனிக் குருவி வழக்கம் போல பழங்களைக் கொண்டு வந்தது. தன்குஞ்சு கொல்லப்பட்டுத் தரையில் கிடந்ததைக் கண்டு கதறித் துடித்தது.

"தகாதவரிடத்து நட்புக் கூடாது. அவர்களிடம் அன்பு கிடையாது. நல்ல எண்ணமும் கிடையாது. காரியம் முடிந்ததும் அவர்களைக் கைவிட்டு விடுவர்.

நன்றி கொன்ற இந்த அரசகுமாரனுக்குச் சரியான பாடம் புகட்டுவேன். பழிவாங்குவேன்" என்று சபதம் எடுத்துக் கொண்டது.

உடனே அரச குமாரனின் கண்களைக் கூரிய நகங்களால் பறித்து எடுத்துக் கொண்டு விண்ணில் பறந்தது. "இவ்வுலகில் செய்கின்ற பாவம் உடனே செய்தவனைச் சாரும். செய்யப்பட்ட பாவத்தின் பயன் செய்தவனிடத்தில் சிறிதும் காணப்படாமல் போனாலும், அவனது சந்ததியைச் சார்ந்து துன்பத்தைத் தரும்" என்று சொல்லியது பூஜனி.

தன் மைந்தனின் கண் பார்வை குருவியால் பறிக்கப் பட்டதை உணர்ந்த அரசன், "மைந்தனின் செயலுக்குத் தண்டனை கிடைத்து விட்டதாகக் கருதி, பூஜனியை நோக்கி.."பூஜனி என் மகன் செய்த தீங்குக்கு நீ தக்க தண்டனை வழங்கி விட்டாய். இரண்டும் சமமாகி விட்டன.நடந்ததை மறந்து இங்கேயே தங்கி விடு" என்றான்.

அது கேட்ட குருவி "ஒருமுறை தவறு நேர்ந்த பிறகு அங்குத் தங்கி இருப்பதை சான்றோர் ஏற்பதில்லை. எனவே நான் இந்த இடத்தை விட்டுச் செல்வதே பொருத்தமாகும்.

வெளிப்படையாக விரோதம் ஏற்பட்ட இடத்தில் நன்மொழிகள் கூறிப் பயனில்லை. இனி நம்பிக்கை ஏற்படாது. பசப்பு வார்த்தைகளால் ஒரு பயனும் இல்லை.

நட்பைக் கெடுப்பவரிடம் நம்பிக்கை கொள்ளாது இருப்பதே இன்பமாகும். உறவினருள் தாயும், தந்தையும் உயர்ந்தவர் ஆவர். மகன் விதையைப் போன்றவன்.நம் கையில் பணம் உள்ளவரைதான் நண்பர்கள் நம்மை நாடுவர்.

ஆதலால் நமது இன்ப துன்பங்களை அனுபவிப்பது ஆத்மா ஒன்றே! ஒருவருக்கொருவர் பகை கொண்டபின், அறத்தில் நாட்டமுடைய நெஞ்சம் வைராக்கியம் அடைந்த பின் சமாதானம் என்ற எண்ணமே வரக் கூடாது. மறுபடியும் மரியாதை கிடைத்தாலும் அந்த இடத்திற்குப் போகக்கூடாது" என்று உரைத்தது.

"குருவியே! ஒருவன் செய்த தீவினைக்குப் பிராயச்சித்தம் செய்வானாகில் அந்தக் குற்றம் அதோடு போயிற்று!. எனவே இங்கு தங்கி இரு" என்று கேட்டுக் கொண்டான் அரசன்.

அது கேட்ட குருவி மன்னனைப் பார்த்து "ஒருமுறை தீங்கு நேர்ந்து மனம் மாறிய பின் மீண்டும் ஒன்று பட வாய்ப்பில்லை. இருவர் உள்ளத்திலும் தாம் செய்த தீங்கு உறுத்திக் கொண்டே இருக்கும்" என்று கூறிற்று.

பிரமதத்தன், "பூஜனி, பழிவாங்கிய பிறகு பகை மாறும்.சாந்திஏற் படும். குற்றம் செய்தவனும் அவன் பாவத்தை அனுபவிக்க நேராது. ஆதலால் இருவருக்கும் நட்பு உண்டாகலாம்" என்றான். (தொடரும்)



இந்தியாவின் பகவத் கீதையை இந்தியாவுக்கே அன்பளிப்புச் செய்த இலங்கையை என்ன சொல்ல?

**திருவரதராசா — வவுனியா**

**மனது விதி எனும் தலை எழுத்தோடு வழிநடத்தப்படுகிறதா அல்லது அவரவர் எண்ணப்படி இயங்குகிறதா?**

மழை கொட்டிக் கொண்டிருக்கிறது.ஒருவர் ஒரு மரத்தின் கீழ் நின்று கொண்டிருக்கின் றார்.
திடீரென அவர் அவரை அறியாமலே சற்று விலகிச் செல்கிறார். அடுத்த கணமே அவர் நின்ற இடத்தில் மரத்தின் பாரிய கிளை ஒன்று முறிந்து வீழ்கிறது.
அவருக்கு வியப்பு நான் எவ்வாறு அந்த இடத்தில் இருந்து விலகி வந்தேன் என.
ஏதோ ஒன்று இருக்கின்றது அவ்வளவு தான்.

**இதழினி — புலோலி**

**அன்பாய் இருந்தால் நடிகன் என்கிறார் கள், கோபமாய் பேசினால் சண்டைக் கோழி என்கிறார்கள், அமைதியாய் இருந்தால் அமசடக்கி என்கிறார்கள், அழுதால் அழுகுனி என்கிறார்கள், சிரி த்துப் பேசினால் கோமாளி என்கிறார் கள், இறங்கிப்போனால் ஏமாளி என்கி றார்கள்.இப்படியான கிண்டல் கேலி களை எவ்வாறு கடந்து செல்வது வியாசரே?**

நிலவைப் பார்த்துக் குரைக்கும் நாய்களின் பேச்சுக்கெல்லாம் நீங்கள் உங்களை மாற்றப் போகின்றீர்கள் என்றால் தாராளமாய் மாற லாம்.
அப்படி மாறினால் அந்த நாய்களில் ஒரு வராய் நீங்களும் நிச்சயம் மாறிவிடுவீர்கள்.
என்ன முடிவெடுக்கப் போகிறீர்கள்?

**திவ்வியா — சுழிபுரம்**

**பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி வளர்க்க முடியாத பெற்றோருக்கு நீர் கூறும் அறிவுரை?**

சாப்பாட்டு மேசையில் இருந்த தண்ணீர்க் கிளாசை பிள்ளை தவறுதலாகத் தட்டிவிட்டது. அது நிலத்தில் வீழ்ந்து நொருங்கியது.
அம்மா 1 : டேய் மடையா.. மேசையில கிளாஸ் இருந்தது உனக்குத் தெரியாதா? ஏன் தட்டி கீழ விழுத்தினாய்? அது என்ன விலை தெரியுமா? அறிவிருக்கா உனக்கு? (தலையில் பிடித்து முது கில் நான்கு குத்தும் விழுகிறது.)
அம்மா 2: தம்பி பயப்பிடாதீர்கள். கவனமாக கால்களை எடுத்து வைத்து இங்கு வாருங்கள். தம்பி கிளாஸ் உடையக் கூடியது. அதை கவன மாகப் பாவிக்க வேண்டும். பாருங்கள் உடைந்த துண்டுகள் எவ்வளவு கூர்மையாக இருக்கின்றன. அவை காயத்தை ஏற்படுத்தக் கூடியன. கவன மாக அவற்றை எடுத்து குப்பைத் தொட்டியில் போட வேண்டும்.
(மகனுடன் இணைந்து தானும் உடைந்த கிளாஸ் துண்டுகளை கவனமாக எடுத்து குப்பைக் கூடை யில் போடுகிறார் தாய்)
இதில் எந்த அம்மாவாக நீங்கள் இருக்கப் போகி றீர்கள்?




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**சுகந்தன் — அம்பனை**

**பெற்றோல் சூத்திரம் இப்பொழுதும் நடைமுறையில் இருக்கா வியாசரே?**

ஆ... வாயில நல்லா வருது. அண்ணன் எப்ப சாவான் திண்ணை எப்ப காலியாகும் என்ற நிலையில் கவர்மெண்ட் இருக்குது நீர் வேற கடுப்பைக் கிளப்பிட்டு.

**சுதன் — குப்பிழான்**

**காலத்தின் தேவை அறிந்து அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்குமா?**

எது காலத்தின் தேவை சுதன்? 2009 இல் முள்ளிவாய்க்காலில் தமிழினம் மூச்செ டுக்க முடியாமல் எழுப்பிய அழுகுரலுக்கு ஒன்றுபடாதவர்கள் இனி எப்போது ஒன்று படப் போகிறார்கள்?
அதைவிட மோசமான காலம் இனி தமிழின த்திற்கு வரப்போவதில்லை.
இவர்கள் இனி ஒரு ஆணியும் புடுங்கத் தேவை இல்லை.

**நிதர்சன் — வல்வெட்டித்துறை**

**விறகுச் சமையலை வெறுத்தொதுக்கும் தாய்க் குலங்களை என்ன சொல்ல?**

ஒரு நாளும் தாய் தன் பிள்ளைகளுக்கு நஞ்சைக் கொடாள்.
கால மாற்றம் நஞ்சென்றறியாமல் நஞ்சை சமைத்து கொடுக்க வைத்து விட்டது.
எந்தத் தாய்க்கும் இந்த நிலை வரக்கூடாது கடவுளே.



பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி வளர்க்க முடியாத பெற்றோருக்கு நீர் கூறும் அறிவுரை?

**விஜயரட்ணம் — யாழ்ப்பாணம்**

**இந்தியாவின் பகவத் கீதையை இந்தியாவுக்கே அன்பளிப்புச் செய்த இலங்கையை என்ன சொல்ல?**

இந்த விடயத்தை வாசிக்கும் போது பகவத் கீதையின் ஒருவரி ஞாபகத்திற்கு வந்தது.
அது உங்களுக்காக இங்கே தரப்படுகி றது.
"உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக் கொடுத்து தேர்வு வைக்கப்படுவது இல்லை.
தேர்வு வைத்த பின்பே பாடம் கற்பிக்கப்படு கிறது"
தேர்வு வைக்கப்பட்டு விட்டது.
இனி பாடம் கற்பிப்பதை எவராலும் தடுக்க முடியாது.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**வியாசரே விஞ்ஞான உலகில் பேய்ப் பயம் தற்போதும் இருக்கிறது தானே? உண்மையில் பேய் இருக்கிறதா?**

தனிமையில் வீட்டில் இருக்கும் போது வீட்டில் ஏதாவது சத்தம் கேட்டால் வரும் படபடப்பு அது பூனையால் வந்தது என உறுதிப்படுத்திய பின் அடங்கிவிடுகிறது.
இதுபேய் இல்லை என வாதிடுவோருக் கும் வரும்.
பேய் மனம் சார்ந்தது என விஞ்ஞானம் கூறினாலும் அது மனித வாழ்வில் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது.
எங்கள் வீட்டில் ஒருவர் இறந்தால் அவர் கடவுள் என்றும், அடுத்த வீட்டில் ஒருவர் இறந்தால் அவர் பேய் என்றும் நினை த்துக் கொள்வது தானே எம் பழக்கம்.

**தாரா — வதிரி**

**அன்புக்கும் அம்பிற்கும் என்ன வித்தியாசம் வியாசரே?**

அம்பினால் ஏற்படும் காயம் ஆறிவிடும்.
அன்பினால் ஏற்படும் காயம் ஆறவே ஆறாது.
இது பலருக்கும் புரிவதில்லை.
எதிரி குத்தினால் வலிப்பதைவிட, எமக்குப் பிடித்தவர் குத்தும் போது அதிகம் வலி க்கும்.
அந்த வலியை வெளிக்காட்டாமல் சிரித்துக் கொண்டிருப்பதுதான் உண்மையான உறவின் அடையாளம்.
தற்போதெல்லாம் அப்பேர்ப்பட்ட அன்பு இருக்கிறதா? என்றால் அட நீங்க வேற பகிடிவிட்டுக் கொண்டு என்ற பதிலே வரும்.

# அழகான சாளரமே



என் வீட்டின் அழகான சாளரமே
அழகான திரையோ நீ என் அழகான
அதிகாலை சூரியன் காண்கிறேன் உன்னோடு
பறவைகளின் அழகும் ஒலிகளும் கேட்கிறேன் உன்னோடு
வெண்பனியின் பூச்சிதறல்கள் காண்கின்றேன் உன்னோடு
மழைத்தூறலும் தூவானமும் ரசிக்கின்றேன் உன்னோடு
வீசிடும் இளந்தென்றல் காற்றும் முகத்தில் மோதக் கண்டேன் உன்னாலே
இரவின் பௌர்ணமி நிலவை ரசிக்கக் கற்றுத் தந்ததும் நீ...
என் நினைவுகளில் பல உன்னோடு இருக்கக் கண்டேன்

தி.திருமாலினி, சங்கத்தானை

## தாயன்பு

கண்ணை இமை காப்பது போல்
காத்திருப்பவள் அன்னை
அன்னை என்ற மூன்றெழுத்தினிலே
தேனிலும் தெவிட்டாத அன்புதனை நிறைத்து
தனது கனவுகளை விதைகளாக ஊன்றி
காலமெல்லாம் காத்திருக்கும் பத்தினி தெய்வம்
அம்மா என்ற ஒற்றை வார்த்தைக்கு
ஆயிரம் அர்த்தங்களை சொரியும் அற்புதப்பிறப்பு
உன் கருவில் என்னை சுமந்த அன்பே
உன்னை ஒருமுறை நான் சுமக்க வரம் வேண்டும்

ஆ.மதுபாலா,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

# சின்னச் சின்னக் குருவி



முட்டையிலே இருந்து வந்த நீங்கள்
முடங்கிக் கிடந்திருந்தால்- இங்கே
முன்னேற வழியேது பாரும்
முடிவாகும் கதையது கேளும்

சின்னஞ்சிறு குருவிகளே நீங்கள்
சிறகடித்துப் பறக்கையிலே தாங்க
உங்க உயரத்தின் எல்லை புரியுது
உல்லாச வாழ்க்கை தெரியுது

சிரித்து பறந்து வந்த நீங்கள்
சிங்கார உலகை அறிய மறந்தேங்க
கண்ணிவைத்துப் பிடித்தே உமை
கறியாக்க நினைப்பார் பாருங்க

பகுத்திறவு கொண்ட பண்பாளன் மனிதன்
பாசம் நேசமின்றி பாதகம் புரிவான்
பாவியவன் செயலைப் பாராதீர் என்றும்
பகிர்ந்துண்டு கூடி வாழும் நீங்கள்

க.சிவகுமார், சுழிபுரம்

# மறந்த கதை

குந்தி இருந்து இழுத்து அரைத்த
அம்மியும் குளவியும் எங்கே- இப்போ
நின்று நிமிர்ந்து சுவிச்சைப் போட்டு
அரைக்கும் கிரைண்டர் இங்கே

அம்மியும் குளவியும் காட்சிப் பெட்டியில்
காட்சிப் பொருளாய் ஆனது- இப்போ
கிரைண்டரும் மிக்ஸியும் குசினிப் பெட்டியில்
பாவனைப் பொருளாய் ஆனது

தில்லையூர் செல்வநாதன்

# மஞ்சம் எந்தன் தாய்மடியே

நெஞ்சமெல்லாம் என் நினைவு
துஞ்சலில்லா உன் உழைப்பு
வஞ்சமில்லா உன் வாழ்த்து
பஞ்சமில்லாப் பாராட்டு
கொஞ்சுகின்ற உன் பேச்சு
விஞ்சுகின்ற உன் கோபம்
கஞ்சமற்ற உன் காதல்
அஞ்சி நிற்கா உன் துணிவு
மிஞ்சி நிற்கும் அறிவுரைகள்
கெஞ்ச வைக்கும் அதட்டல்கள்
பிஞ்சு மனம் நோகாத
நஞ்சகன்ற நல்லுரைகள்
நெஞ்சுக்குள் நூறு உண்டு
கொஞ்சம் தான் கவியில் சொன்னேன்- என்றும்
மஞ்சம் எந்தன் தாய் மடியே- வாழ்வில்
தஞ்சம் உந்தன் காலடியே!

சண்முகராசா பாமகள்
கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா

# மௌனத்தின் தேடல்- 534



## வேண்டுதல்

கண்கள் குளமாகி
சோகம் ததும்ப
கண்ணீருடன் மிரண்டு
யாரைத் தேடுகிறாய்
கொரோனாத் தொற்றால்
தனிமைப்பட்டாளோ அன்னை
அம்மா ஊட்டாத உணவு கசக்கின்றதா?
உயிா கொல்லியிடமிருந்து
நலமாகத் திரும்பிட
இறைவனிடம் இரந்து வேண்டினால்
கருணை காட்டுவான் ஆண்டவன்
தாய் முகம் காணும்வரை
பாதுகாப்பாக இருந்திடு

மங்களம் மனோரஞ்சன்
கல்முனை-02

## அநாதரவாக

தாயும் இல்லை தந்தையும் இல்லை
அண்ணனும் இல்லை
அக்காவும் இல்லை
யாருமற்று அநாதரவாக
கண்களில் இருந்து கண்ணீா சிந்தி
வாடுது இந்தப் பிஞ்சு உள்ளம்

கும்பவாழியன், உடுப்பிட்டி

## புரிந்திட யாருளரோ?

தாய் தந்தையை இழந்த நிலையில்
உடன் பிறந்தோரையும்
பிரிந்த நிலையில்
உற்றாா், உறவினா் அற்ற நிலையில்
வறுமை வாட்டிடும் வதையினால்
வாழ்வில் கையேந்தும்
வயதற்றோா்க்குமோ?
கொடிது கொடிது
இளமையில் வறுமை

தங்கத்தமிழன், காரைநகர்

## துணை தேடி

சொட்டும் நீா சொந்தம் தேடுது!
விட்ட உறவு விழிகளை நிரப்புது!
கனிந்த பாா்வையின் தேடல்
தனிமையைப் போக்காதோ?
கரங்களால் விடிவகற்றும்
பிஞ்சின் கபடமற்ற தெளிவு
அன்பிற்கு ஏங்கி நிற்கிறது
துணை தர வருவாா் யாா்?

சு.சுருத்திகா
யா/ யா.இ.ம.க.

## பார்வையின் அர்த்தம்

உன் பாா்வை என்ன?
சுனாமியா? கொரோனாவா?
எத்தனை முறை படித்தாலும்
புரியாத புதிராகவே உள்ளது
இவன் பாா்வையின் அா்த்தங்கள்

மானிப்பாய்
சி.லதா

# மௌனத்தின் தேடல்- 535



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## விட்டில் பூச்சிகள்

சின்னஞ்சிறு வயதினிலே சிட்டுக்குருவிகளாய் சிறகடித்து
பறக்க வேண்டிய நீங்கள் சீாகெட்ட இப்பூமிதனிலே
ஏழைகளாய் வந்துதித்தனாலோ ஒருவேளை உணவுக்காய்
கைகள் தனை ஏந்தி யாசகம் பெற்றிடும்
விட்டில் பூச்சிகளாய் மாறியது தான் ஏனோ?

ஆ.பாலமதுஜா,
யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

## வறுமை

ஏதோ ஒரு நாட்டின் எதிாகாலம் வீதியில் கையேந்துகிறது
கோயில் கலசமொன்று குப்பையில் கிடக்கிறது
எங்கிருந்தோ வந்த மனிதாபிமானம் தானும் ஏழையென்று
சொல்லாமல் சொல்லி செல்கிறது

கு.பிரகாசன்

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**அனீஸாவின் விருப்பப்படி தமன்சாரி கோயிலில் திருமணம் சிறப்பாக நடந்தது. முல்லைத்தீவிலிருக்கும் தாய்க்கு இரண்டு நாள்களுக்கு முன்பு தொலைபேசியில் அழைத்து தகவல் சொன்னான் நீதன்."சந்தோசம், சந்தோசம். நல்லா இரு அப்பு. வவுனியாவில கொண்ணருக்கும் ஒருக்கா சொல்லிவிடு. சந்தோசப்படுவான்" என்றாள் தாய் பா்லேஸ்வரி.**

## வலி சொல்லும் தொடர்... 05


ஜூனியர் விகடன்

நன்றாக தேநீர் ஊற்றுவான். அதைத் தாண்டியும் அவனுக்கும் எனக்கும் நல்ல உறவிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர், இந்த கைப்பந்தாட்ட திடல் ஓரத்தில், இரவிரவாக நீதன் தனது வாழ்க்கையை என்னிடம் ஒப்புவித்திருக்கிறான்.

இருளுக்குள் தெரியாத அவன் கண்ணீரையும், யாருக்கும் தெரியாத அவனது கடந்தகாலத்தையும் வெளிக்காண்பிக்க முடியாத துயரத்தோடு முழுமையாகக் கேட்டிருக்கிறேன்.

நீதன் மாத்திரமல்ல, இந்த முகாமிலுள்ள அறுபத்து மூன்று தமிழ் இளைஞர்களும் என்னோடு மிக நெருக்கமாகப் பழகுபவர்கள். ஒரு நாளைக்கு அறுபத்து மூன்று தேநீர் குடிக்குமளவுக்கு என்னுடன் சிநேகிப்பவர்கள்.

ஒரே மொழி பேசுபவன் என்பதற்கு அப்பால், தங்களது உணர்வுகளைப் புரிந்தவன் ஒருவன் இந்த முகாமில், தங்களைவிட ஓர் அதிகாரத்திலிருக்கிறான் என்பதில் அவர்களுக்கு ஒரு திருப்தியிருந்தது. அவசரத்துக்குத் தங்களது உணர்வுகளைத் தங்களது மொழியில் மனம்விட்டுப் பேசலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

நீதன் இந்தோனேசியாவில் மூன்று வருடங்களாகத் தங்கியிருந்த காலப்பகுதியில், போகூர் என்ற இடத்தில் சாப்பாட்டுக்கடை நடத்தினான்.

எந்தக்காலத்திலும் அகதிகள் பெருக்கெடுத்துக்கொண்டேயிருக்கும் போகூரில், நீதன் கடைக்கு இரவு பகல் பாராது வாடிக்கையாளர்கள் குவிந்தனர். அருகிலிருந்த அஸ்லா நகர பொலிஸ் நிலையத்திலிருந்து ஒவ்வொரு நாளும் சாப்பாடு எடுத்துப்போகின்ற அனீஸா என்ற பெண் அதிகாரி, ஒரு நாள் நீதன் கழற்றிவைத்த கடிகாரத்தையும் எடுத்துப்போய்விட்டாள்.

சாப்பாடு எடுப்பதற்கு அடுத்தநாள் கடைக்கு வந்த அனீஸா, நீதனிடம் கடிகாரத்தைக் கொடுத்துச் சிரித்தாள். எதையோ புதிதாக அறிந்துகொள்வதுபோல நீதன் பரபரத்தான். தந்த கடிகாரத்தில் நேரம் மீண்டுவிட்டதா? என்பதுபோல தடவிச் சரிபார்த்தான். ஏற்கனவே மூடியிருந்த இனிப்பு போத்தலை இன்னும் இறுக்கமாக மூடிக்கொண்டு சிரித்தான்.

"கடை மூடிய பிறகு, இரவு போகூர் தமன் சாரி கோயிலுக்கு அழைத்துப் போக முடியுமா?" என்றாள் அனீஸா. பொலிஸ்காரியின் காதலுக்கு துணிவு அதிகமிருக்கும் என்று நீதன் புரிந்துகொள்வான் என்று அனீஸா எண்ணினாள். அந்தக் கணத்தில் அடுப்பில் வேக வைத்திருந்த வேர்க்கடலை ரசத்தைத்தவிர நீதனுக்கு எதுவுமே ஞாபகமிருக்கவில்லை.

ஒன்றரை வருடமாக, சமையலோடு சேர்த்து, இந்தோனேசிய மொழியையும் பழகிக்கொண்டதன் பரிபூரணப் பயனை அனீஸாவோடு பேசும்போது நீதன் பெருமையாக உணர்ந்தான்.

தமன் சாரி கோயிலுக்குப் போன பிறகும், அடுப்பு வெக்கைக்கு விலகி நிற்பதுபோல, எட்ட நின்று பேசிக்கொண்டிருந்த நீதனின் வெட்கம், அனீஸாவுக்கு மேலும் மேலும் அவனில் ஈர்ப்பை வார்த்தது.

பச்சைப் புல்வெளியில் மூன்று உயரமான கோபுரங்களுடன் வரிசையாக வீற்றிருந்த கோயிலைச் சுற்றிக்கொண்டு தாங்கள் இருவரும் நடந்துவரும் அழகை, ரகசியமாக ரசித்தாள் அனீஸா.

"தனியாக ஏன் இருக்கிறீர்கள்... சொந்த வீட்டில் வந்து என்னுடன் தங்கிக்கொள்ளலாம்" என்றாள்.

காய்த்துப்போன கைகளை உரசிக் கொண்டு, நீதன் கோபுரத்தின் உச்சியை ரசிக்கும் கோணத்தில் அனீஸாவைப் பார்த்தான்.

அனீஸாவை நீதன் காதலிக்கும் செய்தியும், அவள் வீட்டில்தான் இப்போது நீதன் தங்கியிருக்கிறான் என்ற தகவலும் அந்தப் பகுதி அகதிகள் மத்தியில் போகூர் கடை சாப்பாட்டைவிட அதிகமாக விற்றது.

பொலிஸ்காரியை மடக்கிய நீதனின் திறமையை, கடைக்கு வந்த பலரும் வாசம் வீச புகழ்ந்து தள்ளினார்கள். பொலிஸ் அகடமி விளையாட்டு விழாவுக்கு நீதனை முதன் முதலாக பொது நிகழ்வொன்றுக்கு அழைத்துச் சென்ற அனீஸா, தனது காதலன் என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

அங்கு துப்பாக்கி சுடும் போட்டியில் அனீஸாவும் கலந்துகொண்டு அசத்தினாள். பரிசுபெற்ற அனீஸா நீதனை அழைத்து நெருக்கமாக நின்று படமெடுத்தாள். அகதி என்ற அசட்டு வாழ்க்கை வாழ்வதை வெட்கக்கேடாக எண்ணிக்கொண்டிருந்த தன்மீது, ஒருத்தி இவ்வளவுக்கு அன்பு செலுத்துவதை நீதனால் நம்பவே முடியவில்லை. அவள் வாசனையும் அருகாமையும் நீதனால் எப்போதும் இழக்க முடியாதவையாக மாறத் தொடங்கின. தனது வாழ்வில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளெல்லாம், தன்னை அறியாமல் கனிவதை சாப்பாட்டுக் கடையிலும் எண்ணிப் பூரித்தான்.

அன்றைய நிகழ்விலிருந்து வீடு சென்றுகொண்டிருக்கும்போது அனீஸா முதன்முதலாக திருமணம் பற்றிப் பேசினாள்.

"அப்பா, அம்மா யாரும் இல்லாத எனது வாழ்க்கையில் உன்னைத் தவிர நான் யாரையும் இந்த அளவுக்கு விரும்பியதுமில்லை, நம்பியதுமில்லை. தெரியுமா?"

அனீஸா கூறி முடித்த பிறகும், அவளின் வார்த்தைகள் நீதனுக்குள் கேட்டுக்கொண்டேயிருந்தன. இவ்வளவு நாள்களும் நடைபயின்ற குழந்தைபோல, அனீஸாவின் காதலைத் தாவிப்பிடித்து ரசித்துக்கொண்டிருந்த நீதனுக்கு, அன்றைக்கு அவள் கூறிய வார்த்தைகள், அதிக பொறுப்பை உணரவைத்தன.

போகூரில் நீதனின் சாப்பாட்டுக் கடை வாடிக்கையாளன் ஒருவன், தனது பரிசாக இந்தோனேசிய அரச ஆடையை தைத்துக்கொடுத்தான். அனீஸா வெள்ளைப் புடைவையில் போகூர் இளவரசிபோல காட்சி கொடுத்தாள்.

அனீஸாவின் விருப்பப்படி தமன் சாரி கோயிலில் திருமணம் சிறப்பாக நடந்தது. முல்லைத்தீவிலிருக்கும் தாய்க்கு இரண்டு நாள்களுக்கு முன்பு தொலைபேசியில் அழைத்து தகவல் சொன்னான் நீதன்.

"சந்தோசம், சந்தோசம். நல்லா இரு அப்பு. வவுனியாவில கொண்ணருக்கும் ஒருக்கா சொல்லிவிடு. சந்தோசப்படுவான்" என்றாள் தாய் பாலேஸ்வரி.

(அடுத்தவாரம் தொடரும்)

# கடல் புறா

## வீட்டுப் புறா! காட்டுப் புறா! கடல்புறா!




வேதனையின் காரணத்தை அவன் புரிந்து கொண்டிருந்தான். தன்னிடத்தில் அவளுக்குள்ள காதல், தன் உயிரைப்பற்றி அவளுக்குள்ள பயம் இரண்டுமே வேதனைக்குக் காரணம் என்பதைப் புரிந்து கொண்ட இளைய பல்லவன், "தேவி! எனக்கு நன்றாகப் புரிகிறது. காதலின் தன்மையும் வன்மையும் அப்படிப்பட்டது" என்றான்.

"காதலின் தன்மையா?" காஞ்சனாதேவியின் இந்தக் கேள்வியில் அமுதம் கலந்திருந்தது.

"ஆம் தேவி! காதலென்பதை விஷயம் என்று வடமொழியில் அழைக்கிறார்கள்." என்று விளக்க முற்பட்டான் அவன்.

"அப்படியா?" அத்தனை வேதனையிலும் கேலியிருந்தது அவள் குரலில்.

"ஆம் தேவி! விஷயம் என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல. விஷயத்துக்கும் விஷத்துக்கும் ஓர் எழுத்துத் தான் வித்தியாசமென்றும் சொல்கிறார்கள்?"

"ஆம். ஓர் எழுத்துத்தானே வித்தியாசம்."

"ஆனால் விளைவில் பெரும் வித்தியாசமிருக்கிறது."

"எப்படி?"

"சாப்பிட்டால்தான் விஷம் மனிதனைக் கொல்லும். விஷயத்தை நினைத்தாலே போதும் மனிதன் உடல் உருகிப் போகிறான். வேதனைப்பட்டு இறப்பவர்களும் உண்டு. அத்தனை பயங்கரம் காதலின் நினைப்பு."

"இதை எனக்கு எதற்காகச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டு அவனை நோக்கித் திரும்பினாள் காஞ்சனா தேவி.

அவள் தோள்களை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு அவன் சொன்னான்: "தேவி! நீ என்னை நினைத்து நினைத்து உருகக் கூடாது" என்று.

அவள் கண்களை வெட்கத்தால் நிலத்தில் தாழ்த்திக் கொண்டாள். "ஏன்?" என்று பவள இதழ்களிலிருந்து உதிர்ந்த சொல்லும் வெட்கத்தைப் பூசிக்கொண்டே வெளி வந்தது.

இளையபல்லவன் தனது குரலில் அன்பும் காதலும் கலந்தோடச் சொன்னான்: "நாம் ஒருவேளை இன்று பிரிந்தாலும் மீண்டும் கூடுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அப்படிக் கூடும் போது உன் நிலை என் மனத்தைப் பிளக்கக் கூடாது. நீ சிந்தனையால் சிதைந்து உடல் உருக்குலைந்து போயிருந்தால் என் மனம் வெடித்து விடும். நான் உன்னைச் சந்திக்கும் போது இந்த எழில் உடலின் கவர்ச்சி, அஞ்சன விழிகளின் தீட்சண்யம், கபோலங்களின் பளபளப்பு அத்தனையும் மாறாதிருக்க வேண்டும். இன்று போலவே நீ அன்றுமிருக்க வேண்டும் புரிகிறதா?"

புரிந்தது அவளுக்கு. புரிந்ததால் அவனை நன்றாக நிமிர்ந்து நோக்கினாள். "நான் வாளை வீசுவேன். போரிடுவேன். இருப்பினும் நான் பெண், பேதை என் மனம் உறுதி கொள்ள மறுக்கிறது" என்றாள் அவள்.

"தேவி! மனத்தை உறுதிப்படுத்திக்கொள். உனக்குத் தைரியம் சொல்லவும், என்னை நினைப்பில் வைத்திக் கொள்ள அடையாளமாக இந்தப் புறாவை உனக்குக் கொடுக்கவும் வந்தேன்.

அதற்காகவே அமீரிடமிருந்து இதை வாங்கினேன். அடுத்த சில நாழிகைகளின் நிழ்ச்சிகளைப் பற்றி நாம் எதுவும் சொல்ல முடியாது. நாம் பிரிந்தாலும் பிரியலாம், பிரியா விட்டாலும் இல்லை. நான் மட்டுமென்ன, வண்டி சரியாக வளைக் கப்பட்டால் நீ கூட மாளலாம்.

அப்பிடிச் சாவதானால் வீரர்கள் குலத்தில் பிறந்தவர்களென்று உறுதியுடன் போரிட்டு மடிவோம். பிழைத்தால் வீரர் குலத்தின் மக்களாகச் சந்திப்போம்" என்று உறுதியும் வீரமும் நிரம்பிய சொற்களை உதிர்த்த இளையபல்லவன் அவள் முகவாய்க் கட்டையைத் தூக்கி அவள் கண்களை ஆழ்ந்து நோக்கி, "தேவி! நாம் பிரிவதானாலும் மீண்டும் கூடு மட்டும் நினைவுச் சின்னமாக இந்தப் புறாவைக் கொடுத்திருக்கிறேன்" என்றான்.

பதிலுக்கு அத்தனை துன்பத்திலும் அவள் இளநகை புரிந்தாள். "உங்களை நினைத்திருக்கக் காட்டுப் புறாவைக் கொடுத்தீர்கள். உங்களுக்கு நான் என்ன தரட்டும்?" என்று கேட்டாள் அவள்.

"எதுவும் வேண்டாம் தேவி. நான் எங்கு இருந்தாலும் புறாவின் நினைப்பு எனக்கிருக்கும். இங்கு வந்ததும் வீட்டுப் புறா ஒன்றைக் கண்டேன்.

பிறகு காட்டுப் புறா ஒன்று கைக்கு வந்தது. இனி கடற் புறாவொன்றும் கப்பலில் பறக்கும்!" என்றான் இளையபல்லவன், ஆபத்தான நினைப்புகளை அவள் இதயத்திலிருந்து அகற்ற.

அவள் தனது கண்களை அகல விரித்தாள். "கடல் புறாவா!" என்றும் ஆச்சரியம் குரலில் ததும்ப வினவினாள்.

"ஆம் தேவி! இன்று நீ சீனத்துக் கப்பலில் கடல் மீது பறந்து கொண்டிருப்பாயே?" என்றான் விஷமத்துடன் அந்த வாலிபன். அவள் உள்ள வேதனை அவன் அரவணைப்பில் மறைந்தது. அவள் இதழ்களிலும் விஷமம் தாண்டவமாடியது. "வீட்டுப்புறா இருந்த இடத்தில் ஒரு வாலியன் சாளரத்தின் மூலம் குதித்துத் திரையில் மறைந்து வேடிக்கை பார்த்தார்.

காட்டுப் புறாவைக் கையிலேந்தி இறக்கைகளை நீக்கி விரல்களால் துருவித் துருவிச் செய்திச் சுருளை எடுத்தார். கடல் புறாவை என்ன செய்யப் போகிறார் அவர்?" என்று கோட்டாள் அவள்.

அவன் கைகள் அவளைச் சுற்றிச் சென்றன. விழிகள் அவள் விழிகளைக் கூர்ந்து நோக்கின. "ஏன் கடல் புறாவுக்கு மட்டும் இறக்கைகள் இல்லையா?" என்று கேட்டான். அந்தச் சொற்கள் அளித்த ஆனந்தம், குரல் ஒலி கிளப்பிய வேட்கை இரண்டும் அவளை எங்கோ கொண்டு சென்றன.

சொல்லிலும் செயலிலும் இணையற்ற கருணாகர பல்லவனின் காதலியாகத் தான் திகழ நேர்ந்ததைப் பெரும் பாக்கியமாக மதித்த அவள் இதயம் மீண்டும் உறுதி கொண்டதன்றி, ஒரு வேளை கிழக்குக் கோட்டை வாசலில் வண்டி தடுக்கப்படாவிட்டால் கடற்கரையோரத்தில் அவனும் தானும் அக்கம் பக்கத்தில் நின்று போரிடலாம் என்ற நினைப்பும் அவளுக்கு மிகுந்த தைரியத்தை ஊட்டியது.

துணிவு துளிர்த்ததன் விளைவாக அவளை ஏறெடுத்து நோக்கிய காஞ்சனாதேவி, "கடற்புறாவை நீங்கள் சோதிக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை. அது சிறகடித்து எதிரிகளை வீழ்த்தும் காட்சியை இன்றிரவு எட்டு நாழிகைக்குள் கடற்கரையில் பார்க்கப் போகிறீர்கள்" என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை. சற்று மௌனமாக நின்றான். கடைசியாகப் பிரியாவிடை பெற்று அவன், "வருகிறேன் தேவி! நாழிகைகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. வண்டியும் சித்தமாகிவிடும். நானும் சித்தமாகிறேன்" என்று சொல்லி அவள் கைகளை மெல்ல நெறித்து விட்டுச் சென்றான்.

வண்டி புறப்படும் நேரம் வந்தது. நீக்குடங்களுடன் வண்டி தயாராக நின்றது. அதில் ஏற நின்றிருந்தவர்களை நோக்கி அநபாயன் சொன்னான்: "நமது பயங்கரப் பயணம் துவங்குகிறது. எச்சரிக்கையுடன் இருங்கள். அவரவர் பணியை அந்தந்தச் சமயத்தில் செய்யுங்கள். எதற்கும் அஞ்ச வேண்டாம் கடமையை நாம் செய்வோம் பலன் ஆண்டவன் கரங்களிலிருக்கிறது."

(தொடரும்...)

# அரண்மனை3 திரை விமர்சனம்




அரண்மனை பிரான்சைஸ் சுந்தர் சி.க்கு எப்பொழுதுமே கை கொடுக்கின்றது. தன் படங்கள் ஓடவில்லை என்றால் அரண் மனை படத்தை இயக்கி வெற்றி பெறுகிறார். அரண்மனை முதல் பாகம் வெளியான பிறகு ஆம்பள படம் ரிலீஸாகி கேலிக்கு ஆளானது. உடனே அரண்மனை 2 படத்தை இயக்கினார். வந்தா ராஜாவா தான் வருவேன், ஆக்ஷன் ஆகிய தோல்வி படங்களை அடுத்து அரண்மனை 3 படம் ரிலீஸாகியிருக்கிறது.

அரண்மனை பிரான்சைஸ் படங்கள் பயமுறுத்துகின்றன, குழந்தைகளுக்கு ஜாலியாக இருக்கிறது, பெரியவர்கள் டென்ஷனை மறந்து சிரிக்கிறார்கள். அப்படி இருக்கும்போது அதை பற்றி எப்படி குறை சொல்ல? சுந்தர் சி.யின் முடிவு மிகவும் தெளிவு.

முதல் பாகத்தை போன்று ஒரு பேய் பழிவாங்கும் கதை தான் அரண்மனை 3. ஒரு அரண் மனை, அங்கு ஒரு பேய், சில வித்தியாசமான கதாபாத்திரங்கள் (பேயை முதல் ஆளாகக் கண்டு பிடிக்கும் ஒரு குழந்தை கண்டிப்பாக இருக்கும்), அழகான ஹீரோயின்கள், பார்க்க நன்றாக இருக்கும் ஹீரோக்கள், ஆபத்பாண்டவனாக சுந்தர் சி.சாமியார்கள், கிளைமாக்ஸில் ஒரு சாமி பாட்டு, வி/வல் எஃபெக்ட்ஸ், காமெடி பாடல், அந்த சீசனில் உச்சத்தில் இருக்கும் காமெடியன்.

2014 ஆம் ஆண்டு சந்தானம் நடித்தார். அவர் ஹீரோவாகி விட்டதால் 20.6 ஆம் ஆண்டு சூரி நடித்தார். தற்போது யோகி பாபு. மேலும் விவேக்கும் நடித்திருக்கிறார்.

ஜமீன்தார் ராஜசேகரால்(சம்பத்) பாதிக்கப்படும் ஈஸ்வரி (ஆண்ட்ரியா) அவரையும், அவரின் மகள் ஜோதியையும் (ராஷி கன்னா) பழிவாங்க பேயாக வருகிறார். அந்த பேய் ஏன் தங்கள் குடும்பத்தை குறி வைக்கிறது என்று ஜமீந்தாரின் மருமகனான சுந்தர் சி. கண்டுபிடிக்க முயற்சி செய்யும் போது அரண் மனையை ரிப்பேர் செய்கிறேன் என்கிற சாக்கில் அங்கு வந்திருக்கும் ஜோதியின் காதலரான சரவணன் (ஆர்யா) உடம்பிற்குள் அது சென்று விடுகிறது.

மூன்றாம் பாகம் என்பதால் இரண்டு ஸ்டார் காமெடியன்கள், ஒன்றுக்கு 3 பேய்கள், பிரமாண்டமான செட்டுகள், பயங்கரமான கிளைமாக்ஸ் வைத்திருக்கிறார் சுந்தர் சி. படத்தை பார்ப்பவர்கள் பயப்படுகிறார்கள், காமெடி இருக்கிறது (முதல் பாகத்தை போன்று காமெடியாக இல்லை). படத்தின் பெரும்பாலான பகுதியில் ஆர்யாவை காணவில்லை.

ராஷி கன்னா அழகாக இருக்கிறார். சுந்தர் சி. நம்பிக்கையுடன் பேயை எதிர்கொள்கிறார். யோகி பாபு வழக்கம் போன்று அடுத்தவரை அசிங்கப்படுத்தி காமெடி செய்கிறார். ஆனால் எல்லாமே கணிக்கும்படி இருக்கிறது. அதனால் படம் முடியும்போது பெரிதாக ஆனந்தமோ அதே சமயம் ஏமாற்றமோ இல்லை. அதுதான் சுந்தர் சி.யின் வெற்றி. எளிதில் மறக்கக் கூடிய படத்தை கொடுத்து நம்மை திருப்தி அடைய வைத்திருக்கிறார்.

## இயக்குநர் அவதாரம் எடுக்கும் கார்த்தி, ஜோதிகா





தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக இருக்கும் கார்த்தி மற்றும் நடிகையாக இருக்கும் ஜோதிகா இருவரும் இயக்குநர் அவதாரம் எடுக்க இருக்கிறார்கள்.

திரையுலகில் கறுப்பு வெள்ளை காலத்திலிருந்து நடிகைகள் பரபரப்பாக நடித்துக் கொண்டிருந்தாலும் இயக்குநராக மாறுவதில் ஆர்வம் காட்டுவார்கள். அதில் பானுமதி, சாவித்ரி, விஜய் நிர்மலா ஆகியோர் ஒரு திரைப் பட இயக்குநர்களாக மாறியிருக்கிறார்கள்.

இப்போது உள்ள நடிகர்களில் சிலருக்கு மட்டும்தான் ஒரு படத்தை இயக்க வேண்டும் என்கிற ஆசை இருக்கிறது. அதில் கார்த்தி இயக்குநர் மணிரத்னத்திடம் உதவி இயக்குநராக பணியாற்றிய அனுபவத்தோடு இருப்பவர்.

இவர் விரைவில் ஒரு திரைப் படத்தை இயக்க இருக்கிறார். அதோடு ஜோதிகாவும் தீவிர கதை விவாதத்தில் இருப்பதாகவும் இவரும் ஒரு படத்தை இயக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தப் படங்களை சூர்யாவின் தயாரிப்பு நிறுவனமே தயாரிக்க இருக்கிறது.

## பிக்பாஸ் 5வது சீசனில் அதிக சம்பளம் வாங்கும் பிரபலம் யார் தெரியுமா?



பிக்பாஸ் 5வது சீசன் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. நிகழ்ச்சி ஆரம்பிக்கும் போது இருந்த பரபரப்பு இப்போது நிகழ்ச்சி ஒளிபரப்பாகிக் கொண்டு இருக்கும் நேரத்தில் மக்களிடம் இல்லை என்று தான் கூற வேண்டும்.

நிகழ்ச்சியில் ஒரு விறுவிறுப்பு குறைவதாக மக்கள் கருத்துத் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

இந்த வாரம் பிக்பாஸ் வீட்டை விட்டு சின்ன பொண்ணு அல்லது அபிநய் வெளியேற அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்நேரத்தில் தான் அபிநய் வாங்கும் சம்பளம் குறித்து ஒரு தகவல் பரவி வருகிறது.

விஜய் டிவி யில் படு பிரபலமான முகமாக இருப்பவர் பிரியங்கா, அவருக்கே ஒரு வாரத்திற்கு ரூ 2 இலட்சம் சம்பளம் எனப்படுகிறது.

அவரைவிட அபிநய்க்கு ஒரு வாரத்திற்கு ரூ. 2.75 இலட்சம் சம்பளம், அதாவது பிக்பாஸ் போட்டியாளர்களில் அதிக சம்பளம் வாங்கும் பிரபலம் இவர்தான் என கூறப்படுகிறது.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அன்னை ஓர் ஆலயம்
இயற்றியவர் : வாலி
இசை : இளையராஜா
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



அம்மா
நீ சுமந்த பிள்ளை
சிறகொடிந்த கிள்ளை
என் கண்களும் என் நெஞ்சமும்
கொண்டாடும் தெய்வம் தாயே
அன்னை ஓர் ஆலயம்

அம்மா
நீ சுமந்த பிள்ளை
சிறகொடிந்த கிள்ளை

மண்ணில் என்ன தோன்றக்கூடும்
மழை இல்லாத போது
மனிதனோ மிருகமோ
தாயில்லாமல் ஏது (2)

அன்னை சொன்ன வார்த்தை
இன்று நினைவில் வந்தது
அன்பு என்ற சொல்லே தாயின்
வழிவில் வந்தது
எங்கே எங்கே

அம்மா
நீ சுமந்த பிள்ளை
சிறகொடிந்த கிள்ளை

வாழவைத்த தெய்வம் இன்று
வானம் சென்றதது ஏனோ
உலகிலே உன் மகன்
நீர் இல்லாத மீனோ (2)

மீண்டும் இந்த
மண்ணில் வந்து
தோன்ற வேண்டுமே
வாழ்க வாழ்க மகனே என்று
வாழ்த்த வேண்டுமே
எங்கே எங்கே

அம்மா
நீ சுமந்த பிள்ளை
சிறகொடிந்த கிள்ளை
என் கண்களும் என் நெஞ்சமும்
கொண்டாடும் தெய்வம் தாயே
அன்னை ஓர் ஆலயம்
அன்னை ஓர் ஆலயம்

# கணனியை விட்டு கழனிக்கு வாருங்கள்

**அறிவியல் சார்ந்த நவீன கணனியால் ஒருபோதும் செய்ய முடியாத மனித இரப்பையின் உயிர்த்தெழுதலை கடவுள் தந்த கழனியால் மட்டுமே செய்ய முடியும்.**

ஒரு தேசத்தின் மண் வளமானதாக இருந்தால் அந்த தேசமும் அதில் வாழும் மக்களும் மிகச் சிறப்பாக வாழ்வார்கள். இதுவே எம் முன்னோர் வாழ்வியலின் அடிப்படை அனுபவ சித்தாந்தமாகும்.

மண் வளத்தை கொண்டே அங்கு வாழும் மக்களின் மனோ வளமும் தீர்மானிக்கப்படும். மண்ணுக்கும் மனித மனதுக்கும் இயற்கையாகவே நிறைய தொடர்புகள் உண்டு. மண் வயிற்றுப் பசியைப் போக்குகின்றது. மனம் ஞானப் பசியைப் போக்குகின்றது. இந்த இரண்டு பசிகளின் முழு திருப்தியே, ஒரு மனிதனின் அகம் புறம் சார்ந்த வாழ்வியலின் முழுமையான அந்த நிறைவே அங்கு வாழும் மக்களின் பசியைப் போக்கி. மனதை அறம் சார்ந்த ஞானத்தை நோக்கி நல்வழிப்படுத்துகின்றது.

அறிவியல் சார்ந்த நவீன கணனியால் ஒருபோதும் செய்ய முடியாத மனித இரப்பையின் உயிர்த்தெழுதலை கடவுள் தந்த கழனியால் மட்டுமே செய்ய முடியும். நம் தேசத்து விவசாயிகள் சேற்றிலே ஏரை ஓட்டி செயலாற்றிக் கொண்டு இருப்பதை நாம் எண்ணற்ற தடவைகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அறிவியலுக்கும் அரிசிக்கும் சிறு வித்தியாசம் தான். அறிவியலின் உச்சம் அழிவை உண்டாக்கும். அரிசி பெருமளவில் பெருக்கி. அதை தன் மக்களிடம் குறைந்த விலையில் கொண்டு செல்லும் அரசே என்றும் மக்களின் அரசாக தர்மத்தால் போற்றப்படும்.

அரிசியில்லா தேசத்தில் வெறும் அரசியலை மட்டும் பேசு பொருளாகக் கொண்ட ஆட்சியாளர்களிடம் அரிசி கேட்டு மக்களின் ஆன்மா வலிமை பெறும் என்றால், அங்கு ஆட்சியாளர்களின் செங்கோல் தர்மத்தில் இருந்து பிசகி அதர்மத்தில் வீழ்ந்து விட்டதாகவே உலகின் மனசாட்சியால் கணிக்கப்படும்.

அறிவியலினால் உலக அரசியல்தான் முளைத்தெழும். அரிசியினால்தான் எம் ஆன்மிகம் விழித்தெழும். அதனால்



பரிபூரண நிலையாகும்.

இந்த இரண்டு பசிகளையும் போக்கும் ஆற்றலை எந்தவிதமான நவீன அறிவியலும் எமக்கு தந்துவிட முடியாது நம் பாரம்பரிய கழனிகள். நம் உழைப்பினால் நல்ல நிறைவான விளைச்சலை தரும் என்றால், நம் தேசம் அரசியலற்ற அரிசியில் தன்நிறைவு காண்கின்றது என்று அர்த்தம் கொள்ளப்படும்.

யின் உச்சமோ இன்னோர் படைத்தலை உருவாக்கும்.

விளைச்சல் தரும் கழனிகளில் எல்லாம் கட்டடங்களைக் கட்டி. நவீனத்துவம் என்ற பெயரில் கணனியின் நவீன வளர்ச்சியை மேம்படுத்தும் ஒரு அரசு மக்களின் வயிற்றுப் பசிக்கு முன்னால் வெறும் தரிசாகவே பார்க்கப்படும். ஒரு ஜனநாயக நாட்டில் சொந்த உற்பத்தியை வைரசைத் தரும் கணனிகளை குறைத்து. நம் வயிற்றைக் கழுவும் கழனிகளை பெருக்குவோம் என்ற கொள்கையில் ஊறிப் போன தேசமே எந்த பேரிடர்களிலும் மக்களை காப்பாற்றும் தேசமாக உலக வரைப்படத்தில் உயர்ந்து நிற்க முடியும்.

**சாம்-ரமேஸ்குமார்**




டேய்... ஒழுங்கா ஓடிப்போயிடுங்க இல்ல ராத்திரில பேயை கூப்பிடுவேன்.

கூப்பிடுறது தான் கூப்பிடுறீங்க... காஞ்சனா பேயை, இல்லைன்னா அரண்மனை பேயைக் கூப்பிடுங்க நல்ல காமெடியா இருக்கும்.

வெஷம்... வெஷம்... வெஷம்... இந்த ஊர்ல பேய்ங்களைக் கூட காமெடி பீசா ஆக்கி வச்சிருக்காங்க...

Bigboss, வீட்டுல பெரிய வேலைன்னு பார்த்தா ரெண்டே ரெண்டுதான்... இங்கேந்து அங்க போயிட்டு உக்காந்து இவங்களப் பத்தி பேசணும்... அங்கேந்து இங்க வந்து திரும்ப உக்காந்து அவங்களப் பத்தி பேசணும். அவ்ளோதான்!

என்ன பிரேக்ஃபாஸ்ட்!?
தோசை!
எப்ப பாத்தாலும் தோசையா!? அப்போ இட்லி செய்யவா!
எப்ப பாத்தாலும் இட்லியா!?
பொங்கல் ஓகே வா!?
உவ்வே!
சேமியா செய்யவா!?
அதெல்லாம் மனுஷன் திம்பானா!
ரவா உப்புமா!?
ச்சை!
இந்தா டம்ளர்!
எதுக்கு!?
நீ சாப்பிடவே வேணாம்!
தண்ணிய குடிச்சுட்டு கௌம்பு! போ!



# சீனப் பெருஞ்சுவர்

அவளுக்கு சுரைக்காய்ச் செடி பிரியமான ஒன்று என்பதால் இன்றைக்கும் சுவர் மறுசீரமைப்பு பணிகளுக்கு செல்லும் கணவனுக்காக மனைவிகள் சுரைக்காய் செடிகளை சுவரோரம் படர விடுகிறார்கள். சியாங்க் நு வுக்கான கோவில் ஒன்று ஹெபாய் மாகாணத்தில் சின்ஹங்டா என்ற இடத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

பெருஞ் சுவர் பற்றியும் பல கதைகளில் பரவலாக பேசப்படும் இன்னொரு சுவாரசியமான கதை சி ஜெகிங்கில் உள்ள வைப் டவர் (wife tower) பின்னணியாகக் கொண்டது.

ஷாண்டாங் மாகாணத்தில் வாங்க் என்பவர் சூ லான் என்கிற தன் மகளுடன் வாழ்ந்து வந்தார். வூ சான்ஹூ என்கிற சிறுவன் ஆதரவற்றவனாய் திரிந்து வந்தான். அவன் மேல் பரிதாபப்பட்டு அவனை தத்தெடுத்து வளர்த்து வந்தார். இருவருக்கும் சீனாவின் பிரபலமான தற்காப்புக் கலைகள் பலவற்றையும் கற்றுத் தந்தார்.

உரிய வயது வந்ததும் இருவரும் காதலித்து வந்ததை அறிந்து இருவருக்கும் திருமணம் செய்து வைத்தார்.

சீன எல்லையில் அவ்வப்போது எதிரிகள் அடிக்கடி ஊடுருவுவதால் அவர்களைத் தடுக்க அரசு படைக்கு ஆள் தேவைப்பட்டது.

வூ சான் ஹூ இயல்பாகவே தேசப் பற்று மிக்கவன். எனவே திருமணமான மறுதினமே அந்தப் பணியில் விருப்பத்துடன் சேர்ந்தான்.

சுவரில் ஆங்காங்கே இருந்த கண்காணிப்புக் கோபுரம் ஒன்றில் அவனுக்கு காவல் பணி. கொஞ்சமும் கண் அசராமல் அந்தப் பணியில் ஈடுபட்டு வந்த வூ சான்ஹூ சிறு வயதிலிருந்தே தற்காப்புக் கலைகளில் வல்லவன் என்பதால் கொள்ளையர்களால் நுழைய முடியாமல் போனது.

எனவே தனித்தனியாக முயற்சிப்பதைவிட ஒன்றாகச் சென்று அவனை வீழ்த்தலாம் எனத் திட்டமிட்டு ஒரு கும்பல் இரவில் பதுங்கிப் பதுங்கி வந்தது.



திருமணமான நாளில் இருந்தே எல்லைப் பாதுகாப்புப் பணியில் இருந்து கணவனை பார்க்க ஒரு நாள் புறப்பட்டு வந்தாள் சூ லான்.

அவள் வருகின்ற நேரத்தில் அந்த கொள்ளைக் கும்பலும் கண்காணிப்பு கோபுரம் அருகே வருவதை பார்த்து விட்டாள். அவளும் தற்காப்புக் கலையில் பயிற்சி பெற்றவள் என்பதால் அவர்களைத் தாக்கி ஆக்ரோஷமாக சண்டையிட்டாள்.

இந்த சண்டையின் போது எதிர்பாராதவிதமாக எதிரி ஒருவன் வீசிய குறுவாள் வூ சான்ஹூவின் மீது பாய்ந்து அவன் அந்த இடத்திலேயே மரணம் அடைந்து விட்டான். தனி ஒருத்தியாக நின்று அந்த கும்பலை விரட்டியடித்தாள் சூ லான்.

நேரமோ நள்ளிரவு. அருகே கணவனின் பிணம். கூப்பிடும் தூரம் வரை யாருமற்ற வனாந்திரம். கணவனின் உடலை எடுத்துச் செல்வது வலுவான அவளுக்கு பெரிய விடயமில்லைத்தான்.

ஆனாலும் காவலுக்கு ஆள் இல்லாமல் போய்விடும் என்பதால் கணவனின் இடுப்பில் இருந்த வாளை கையில் எடுத்துக் கொண்டு கோபுரத்தின் உச்சியில் நின்று மிச்ச இரவில் காவல் பணியில் ஈடுபட்டாள் சூ லான்.

சீனர்களின் நாட்டுப்பற்றுக்கு உதாரணமாக சொல்லப்படும் சூ லான் காவல் காத்த இடம் "வைப் டவர்" எனப்படும் மனைவி கோபுரம்.

இப்படி அடுக்கப்பட்ட கற்களுக்கு நிகராய் அழகழகான கதைகள் நிரம்பிய சீனப் பெருஞ்சுவர் மனிதனின் ஆற்றலுக்கும் கற்பனைக்கும் முயற்சிகளுக்கும் எல்லையே இல்லை என்று நிரூபித்துக் கொண்டிருக்கிற உலகின் மிக நீளமான தொன்மையான சாட்சி.

(முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2439

### விதுசா

எனக்கு ஒரு டவுட்டு வருமானத்துக்கு அதிகமாக சொத்து இருந்தா வழக்கு போடுவாங்களாம்



அப்போ வருமானத்துக்கு அதிகமாக கடன் இருந்தா அடைச்சிடுவாங்களா?

### காண்டீபன்

ஏன் இவ்ளோ லேட்?
சாரிங்க...புடைவை செலக்ட் பண்ற ஆர்வத்தில வோச்சில டைமையே பாக்கலைங்க



சரி...பக்கத்தில இருந்த கலண்டரையுமா பார்க்கல நீ கடைக்குப் போய் 3 நாட்கள் ஆச்சுதடி

### குமுதினி

எல்லாருமே கண்டிப்பா கல்யாணம் பண்ணிக்கனும்



ஏன்னா சந்தோசம் மட்டுமே வாழ்க்கை இல்லை...

### தயாளன்

எதுக்காக விவாகரத்து கேட்குறே நீ?
சில உண்மைகளை மறைச்சு கல்யாணம் பண்ணிட்டாங்க யுவர் ஓனர்...
அப்படி என்ன உண்மைகளை மறைச்சுட்டாங்க?



பொண்ணுக்கு கராத்தே, குங்ஃபூ, குஸ்தில்லாம் தெரியும்னு சொல்லாம மறைச்சுட்டாங்க யுவர் ஓனர்...

### பாரதி




ஐயையோ அதுக்குள்ள விடிஞ்சிருச்சே இப்ப ஸ்கூலுக்கு கிளம்ப சொல்லுவாங்களே...




மூதேவி இன்னும் விடியலை சாயங்காலம் தான் ஆயிருக்கு

### விபுஷனா

மழை, மனைவி இரண்டிற்கும் என்ன ஒற்றுமை?



ரெண்டுமே இல்லாதபோது எப்ப வரும்னு ஏங்குவோம் வந்தா ஏன்டா வந்ததுன்னு புலம்புவோம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# அந்திக் கரையினிலே...

என்னைச் சுற்றி தீப்பந்தங்களின் சுடர்கள் துடித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றின் நடுவே நான் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கிறேன். நான் இத்தனை வருடங்கள் வாழ்ந்து முடித்ததில் தேடிக் கொண்ட உறவுகள் என்னைச் சுற்றி நிற்கின்றன.

75 வருடங்களுக்கு முன்பு நானும் எனது அப்புவும் சேர்ந்து முற்றத்தில் நட்ட மாமரம் நிழல் பரப்பி நிற்கிறது. நேற்று இரவு கூட நான் குழை முறித்துப் போட்ட ஆட்டுக் குட்டி பசியில் கத்தும் குரல் கேட்கிறது. எனது பேரக் குழந்தைகள் எனக்குப் பந்தம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் எனக்கு வெளியே நின்று நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

"கிழவனுக்கு நல்ல நிறைவான சாதான்" யாரோ பேசிக் கொள்வது கேட்கிறது. சாவிலும் நிறைவு இருக்குமோ? அவர் எதை நினைத்து இப்படிச் சொல்லியிருப்பார்? பாயில் கிடந்து அழுந்தாமல் நான் செத்துப் போனதைச் சொல்லியிருப்பாரோ? அல்லது நான் கடைசி வரை பிள்ளையின் அனுசரணையுடன் 'நான்' என்ற இறுமாப்புக் குன்றாமல் இருந்து செத்துப் போனதைச் சொல்லியிருப்பாரோ?

சில சமயம் நான் சாதிக்க வேண்டியவற்றை எல்லாம் சாதித்து என் கடமைகள் எல்லாவற்றையும் முடித்து சந்தோசமாகச் செத்துப் போனதாக நினைத்துக்கூட அவர் அதைச் சொல்லியிருக்கலாம். கொள்ளி வைக்க ஆயத்தமாக நிற்கும் என் ஒரே மகன் இப்பொழுதும் விக்கி விக்கி அழுது கொண்டிருக்கிறான். அவன் அப்படித்தான் முன்பு சிறியவனாக இருக்கும் பொழுது கூட பள்ளிக்கூடம் போவதற்கு இதே மாதிரி அழுவான். போயும் போயும் இந்த தொண்ணூறு வயதுக் கிழவன் செத்துப் போனதற்கு அழுகிறானே!

அவனுக்கு ஆறுதல் சொல்ல நினைக்கிறேன். முடியவில்லை. எனது வாய் எனக்கே அந்நியமாகிப் போய் அதற்கு வாய்க்கரிசியும் போடப்பட்டிருக்கிறது.

நான் பூரணமாக வாழ்ந்து முடிந்தாகிவிட்டது. பேரப்பிள்ளைகளின் சந்தோசங்களையும், ஏன் பூட்டப் பிள்ளை ஒன்றையும் கூடப் பார்த்து விட்டேன். இனியும் ஏன் வருத்தம், துன்பம் என்று பாயில் கிடந்து அவதிப்பட வேண்டும்? எனக்கு இனி விடுதலை. இதற்குப் போய் இவன் அழுது கொண்டிருக்கிறானே?

என்னுடைய இந்த ஒரே மகனைப் பார்த்து சில நாட்களுக்கு முன் நான் பேசிய வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன. "டேய்! என்னுடைய சவத்திலையும் முழிக்காதை. எனக்கு நீ கொள்ளியும் வைக்கப்படாது."

எதற்காக நான் இப்படிச் சொல்ல வேண்டி வந்தது? என்னை இவ்வாறு சொல்ல வேண்டிய கட்டத்திற்கு அவன் கொண்டு வந்தான். இப்பொழுது மட்டும் ஏன் விக்கிவிக்கி அழுது கொண்டிருக்கிறான்? ஊர் உலகத்திற்காகவா? இல்லை. அவனை எனக்குத் தெரியும். அவனின் 'பொய்' அழுகையையும் 'மெய்' அழுகையையும் வித்தியாசப்படுத்தவும் எனக்குத் தெரியும். இந்தக் கிழவன் இறந்து போனான் என்பதற்காகத்தான் அழுது கொண்டிருக்கிறான். பாசம் என்று சொல்லுவது வெளிப் பூச்சல்ல. அது அவனை அறியாமலேயே அவனின் ஊனிலே உறைந்து போயிருக்கும் ஓர் உள்ளுணர்வு.

இவன் சின்னவனாக இருந்த காலம் எனக்கு அப்படியே ஞாபகம் இருக்கிறது. சரியான குழப்படி. சொல்லே கேட்க மாட்டான். மண்ணில் படுத்து உருளுவான். மண்ணை அள்ளித் தலையில் போடுவான். எல்லாவற்றையும் எறிந்து உடைப்பான். புத்தகம் கொப்பிகளைக் கண்டால் கிழிப்பான் அல்லது கிறுக்கி வைப்பான்.

"ஏன்டா இப்படிச் செய்தனி?" என்று கேட்டால் பிஞ்சு மொழியில் அதற்கும் ஒரு விளக்கம் சொல்வான். ஆனால் எனக்கு ஏனோ கோபம் வருவதில்லை. அவன் புத்தி தெரியாத பிள்ளை. இவற்றை எல்லாம் சகித்துக் கொள்ள வேண்டியது எனது கடமை என்பது எனக்குத் தெரியும்.

அதேபோல நானும் தளர்ந்து போய் புத்தி சற்றுத் தடுமாறிப் போய் இருக்கும் நேரத்திலே கதைப்பவற்றையும் செய்பவற்றையும் அவன் அமைதியாகத் தாங்கிக் கொண்டால் என்ன? இந்த 90 வயதுக் கிழவனைக் கண்டிக்க இவன் யார்? இதற்காகத்தான் அன்று இவனை ஏச வேண்டி வந்தது. என்னுடைய மகனுக்கு ஓயாத வேலை தான். பாவம், அமைதியாக வீட்டில் உறங்கக் கூட அவனுக்கு நேரம் போதாது. ஆனால் நானும் ஒரு காலத்தில் இதேபோல ஆயிரம் விடயங்களைப் பேசி பல அலுவல்கள் பார்த்தவன் தான்.

அப்படிப்பட்ட என்னைப் பார்த்து "உங்கடை அலுவலை மட்டும் பார்த்துக் கொண்டு தேவையில்லாத விடயங்களில் தலை போடாமல் இருங்கோ" என்று சொன்னானே. அது எப்படி முடியும்? எத்தனையோ விடயங்களையும் காரியங்களையும் செய்து பழகிப்போன இந்த மனிதன் வீட்டிற்குள்ளே முடங்கிப்போய் இருக்கிறானே.

என்னுடைய உலகம் இந்த வீடும் அதன் சுற்றுவட்டாரமுமாய் ஒடுங்கிப் போய் இருக்கும் போது அந்த அலுவல்களைப் பற்றி பேசாமல் எதைப் பற்றிப் பேசுவது? இவனுக்கு இப்போது விளங்காது தான். ஆனால் விளங்கும் காலம் ஒன்று வரும். இவனுடைய மகன் இவனுக்கு விளங்கப்படுத்துவான்.

"கிழவனுக்கு வயது போனாலும் கடைசிக் காலம் மட்டும் கர்வம் கொஞ்சங் கூடக் குறையவே இல்லை."

யாரோ பேசுவது கேட்கிறது. கவனித்துப் பார்க்கிறேன். முன் வீட்டுக் கந்தையர் தான். வாய் நிறைய வெற்றிலையுடன் யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறார். முந்த நாள் இதே கந்தையர் என்னைச் சந்தித்து "உங்களைப் போல நல்ல மனிதர் ஊருக்கை யார் இருக்கினம்?" என்று கேட்டது ஞாபகம் வருகிறது. வயது போனால் கர்வமும் சேர்ந்தே போக வேண்டும் என்று யார் சொன்னது? கிழவன் என்றால் பிறர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு இருந்து சாக வேண்டியது தான் என்று நினைக்கிறார்களா?

அடுத்த வீட்டுச் செல்லையா என் மகனைத் தடவிக் கொடுத்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறார். மகனும் பாவம் தான். ராத்திரியில் இருந்து சாப்பாடு தண்ணி இல்லாமல்... இப்பொழுதும் அழுது கொண்டே இருக்கிறான். நான் பேசியதை நினைத்துத் தான் அழுகிறானா? இல்லை... இருக்காது. அவனுக்கு என்னை நன்றாகத் தெரியும். கோபம் வரும் போது நான் எல்லை மீறிப் பேசுபவன் என்பது அவனுக்குத் தெரியும். நான் இறந்து போனதை நினைத்துத்தான் அவன் அழுது கொண்டிருக்கிறான்.

மகனுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் செல்லையாவும் பாவம் தான். அவருக்கு 5 பிள்ளைகள். இரண்டு வெளிநாட்டில், இரண்டு கொழும்பில். இங்கு இருக்கும் மகனுடனும் ஏதோ பிரச்சினை. தனியத்தான் இருக்கிறார்.

என்னுடைய மகன் என்றால் என்னை இப்படித் தவிக்கவிட்டிருப்பானா? எனக்குக் காய்ச்சல் வந்தால் அவனுக்கு நித்திரை வராது. இப்படிப்பட்ட மகனைத் தான் நான் "எனக்குக் கொள்ளியும் வைக்கப்படாது" என்று பேசினேன். ஏன்? நான் அப்படிச் சொல்லாமல் விட்டிருக்கலாம். மகனுடன் இறுதியாகச் சில வார்த்தைகள் பேச வேண்டும் என்ற ஒரு துடிப்பு என்னுள் இருந்து கொண்டிருக்கிறது. நான் பேசத்துடிக்கும் இந்த வார்த்தைகள் அவனின் இதயத்திற்கு கேட்கும் என்று நம்பி பேசிப் பார்க்கிறேன்.

"தம்பி! உன்னிலே எனக்குக் கோபம் இல்லை. சொல்லிலே சொல்ல முடியாத அன்பு மட்டும் தான் இருக்கிறது. நீ என்னுடையவன் என்ற உரிமையில் நான் எல்லை மீறிப் பேசியவை உண்மையில்லை. நீ ஓயாமல் உழைத்துக் கொண்டே தான் இருக்கிறாய். எனக்காக, உன் குடும்பத்திற்காக, ஏன் இந்த ஊருக்காகவும் உழைத்துக் கொண்டு தான் இருக்கிறாய். இப்படி உன்னால் முடியுமாக இருக்கும் காலத்திலேயே உன்னைப் பற்றியும் கொஞ்சம் சிந்தித்துப் பார். பிற்காலத்தில் உன் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள். இது காலத்தின் ஒரு கட்டாய தேவை. பெரியவர்கள், மூத்தவர்கள் என்று ஏட்டிலும் எழுத்திலும் தான் முக்கியத்துவம் இருக்கிறது. நடைமுறையில் அந்தக் கௌரவம் கிடைப்பதேயில்லை.

இவ்வளவு காலமாக எங்களுக்காகவே உழைத்துத் தேய்ந்து போன ஒரு உயிர் என்ற உணர்வு இருப்பதேயில்லை. குழந்தைகளைப் போலவே முதியவர்களும் இலகுவில் நோய் வாய்ப்படும் தன்மை உடையவர்கள். ஆனால் குழந்தைகளுக்குக் கிடைப்பது போன்ற கவனிப்பும் பாதுகாப்பும் மருத்துவ வசதிகளும் முதியவர்களுக்குக் கிடைக்கிறதா? ஏன்? இவர்களைத் தேவையற்றவர்கள் என்று நினைக்கிறார்களா? உழைப்பை உறிஞ்சி எடுத்தபின் பிழிந்து எறியும் சக்கைகள் என்று நினைக்கிறார்களா?

உனக்குத் தெரியும் எழுபத்து நான்காம் ஆண்டு உணவுக்குப் பெரிய பஞ்சம் வந்தது. அதில் இறந்து போனவர்களில் பெரும் பங்கினர் முதியவர்கள் என்பது உனக்குத் தெரியுமா? இது எதைக் காட்டுகின்றது?

உன்னுடைய அந்திக் காலத்தில் உனக்காகக் குரல் கொடுக்க, பாதுகாக்க யாருமே இல்லாமல் போகலாம். நீ தான் உனக்குப் பாதுகாப்பு. உன்னைப் பற்றியும் கொஞ்சம் இப்பொழுதே சிந்தி. நான் இப்படியெல்லாம் பேசிக் கொண்டு போவது உன்னை மறைமுகமாகக் குற்றம் சுமத்துவதற்காக என்று நினைக்காதே. நீ உண்மையில் அப்படிப்பட்டவனும் அல்ல. உன் அந்திக் காலத்திலும் எனக்கு அக்கறை இருக்கிறது என்பதுதான் உண்மை.

சந்ததிக்குச் சந்ததி மனிதன் மாறிக் கொண்டிருக்கிறான். இன்று நீ 'பிழை' என்று நம்பிக் கொண்டிருக்கும் ஒன்றை உன் அடுத்த சந்ததி 'புனிதம்' என்று சொல்லலாம். இந்தக் கொள்கை வேறுபாட்டை 'சந்ததி இடைவெளி' என்று சொல்லுவார்கள், உனக்குத் தெரிந்திருக்கும். இந்த இடை வெளியை சகித்துக் கொள்வது உன் கடைசிக் காலத்தில் கஷ்டமாக இருக்கும். அதுதான் பல பிரச்சினைகளுக்கு அடிநாதமாயும் இருக்கும். எனவே நீ இதை சகித்துக் கொள்ள இப்பொழுதிலிருந்தே உன்னைத் தயாராக்கிக் கொள். ஏனெனில் நீ தனிமனிதனாக நின்று அடுத்த சந்ததியைத் திருத்த முடியாது."

நான் மீண்டும் மகனைப் பார்க்கிறேன். இப்பொழுதும் அழுது கொண்டே இருக்கிறான். நான் பேசியவை அவனது மனதிற்குக் கேட்டிருக்குமா? அன்று நான் பேசியவை என் நெஞ்சிலிருந்து வரவில்லை என்பதை விளங்கிக் கொண்டிருப்பானா? என்னுடைய மகன். நான் வளர்த்த மகன். அவனுக்கு உலகம் தெரியும். இயற்கையின் நியதிகளும் புரியும். "எனக்கு நீ கொள்ளி வைக்கப்படாது" என்று நான் சொன்ன பின்பும் கொள்ளி வைக்க ஆயத்தமாகி நிற்கிறானே. அதிலிருந்து தெரியவில்லையா? அவனுக்கு எல்லாம் தெரியும் என்று.

"தம்பி! எனது ஆவி இங்கிருந்து போக வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்கு முன் சில விடயங்கள் கேட்பேன். செய்வாயா? முற்றத்தில் நிற்கும் மாமரத்தைத் தறிச்சுப் போடாதை. அந்த சிவத்த ஆட்டுக் குட்டியை இறைச்சிக்காரனுக்கு விற்றுப் போடாதை. எனது பூட்டப் பிள்ளைக்குக் கர்ணனின் கதை சொல்லிப் பாதியில் இருக்கிறது. அதை முடித்துவை. செய்வாயா?"

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்